தென்றல்

"போற்றுபவர் போற்றட்டும்; —புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ;
தொடர்ந்து செல்வேன்!
ஏற்றதொரு கருத்தை என(து)
உள்ளம் என்றுல்
எடுத்துரைப்பேன் ; எவர் வரினும்
நில்லேன் ; அஞ்சேன்!"

ஆசிரியர் : கண்ணதாசன்

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணு. | வெளி நாடு: மூன்றணு. | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-14

மலர் 1	சென்னை	12—2—1955	சனிக்கிழமை	இதழ் 33

வயிற்றிலிருந்து வந்த வாக்கு !

அன்றொரு நாள் அணிதேர் புரவி ஆட்பெரும் படையுடன் ஆண்டவர்கள் நாம் : தனி நாடாக இருந்தோம்! தன்னுட்சி செலுத்திஞேம்; அவனிக்கெல்லாம் 'நாகரீகத்தின்' அரிச்சுவடியைக் கற்றுக்கொடுத்தவர்கள் நாம்! காவிரியின் ஓரத்திலே மட்டுமல்லாமல் கங்கைநதி தீரத்திலும் நம் புகழ் பரவிற்று. பர்மாவிலே பவனி வந்தான் சோழன்; இமயத்திலே 'விற்கொடி' பொறித்தான் சேரன்; சிங்கப்பூரிலும் தமிழரின் கீர்த்தியை நிலைநாட்டினுன் கரிகாலன்! வீரமும் காதலும் விளையாடிய கொலுக்கூடம் திராவிடம் ! என்றெல்லாம் இலக்கியம் நம் பெருமையைக் கூறுகின்றது; இடிந்து சரிந்து கிடக்கும் கோட்டை கொத்தளங்களும், தூர்ந்து மண்மூடிக்கிடக்கும் அகழிகளும், மடிந்துபோன பண்டைத் தமிழ் மன்னர்களின் மாட்சியினை விளக்கிக்கொண்டிருக்கிறது.

நம் நாகரீகம் மிக மிகப் பழமையானது. தொன்மையும் சிறப்பும் பெற்றது;. வரலாற்று ஆசிரியர்களால் அறுதியிட்டுக் கூறமுடியாத அடக்கிற்று தமிழகம்; அடலேறு ஒத்த மன்னர்கள் இனமுழக்கம் செய்து கொண்டிருந்தனர். இவைகள் நம் இனக்கீர்த்தி! தாயகத்தின் சிறப்பு! இனம் பற்றி இலக்கியங்களில் காணப்படும் குறிப்புகள் !

இப்படி தொன்மை மிகு திராவிடரின் வரலாற்றை நூறு வகையாக விரித்துக் கூறலாம். இத்தனை காலம் உண்டுண்டுறங்குவதைக் கண்டதேயல்லாமல் வேருென்றுமறியா கவர்னர் பிரகாசா நம் வரலாற்றை, நம் இன மாண்பை, விடுதலை முழக்கத்தைப் புரிந்து பேசியிருக்கிருர்.

6-2-55 அகில இந்திய அச்சகத்தார் மூன்ருவது மாநாட்டினைத் துவக்கிவைத்துப் பேசுகையில் கவர்னர் பிரகாசா கீழ்க்காணும் மணிமொழிகளை உதிர்த்திருக்கிருர்.

"தென்னுட்டின்மீது வடநாடு ஆதிக்கம் செலுத்துகிறது"

"தென்னுட்டிற்கு வடநாடு தேவையில்லை என்ற எண்ணம் தென்னுட்டில் நிலவுவது தெளிவாகத் தெரிகிறது."

"வடநாட்டிலிருந்து தென்னுட்டைப்பிரித்துவிடவேண்டுமென் கூடாது என்ற நம் எண்ணத்தைப் பிரகாசாபுரிந்துகொண்டிருக்கிருர். வடநாட்டு ஆதிபத்தியத்திலிருந்து விலகி-தனக்கென ஒரு தனியாட்சி-மற்ற உலக நாடுகளைப்போல வாழ வேண்டு மென்றநம் லட்சியத்தை, இதயகீதத்தை-அந்த கீதம் எழுப்பும் விடுதலைப் பட்டாளத்தை-அந்த அணிவகுப்பின் சக்தியை - திட்டவட்டமாகக் கவர்னர்புரிந்துகொண்டிருக்கிருர்.

இவ்வளவு வலுவுள்ள ஒரு இயக்கம்-வடநாட்டிலிருந்து தென்னுட்டைப் பிரித்துவைக்கின்ற முயற்சியிலே ஈடுபட்டிருப்பதைக் கண்டு கவலைப்படுகிருர்! பாவம்! அப்பாவி கவர்னருக்கு இனமுழக்கம் விளங்கிவிட்டது. புரிந்துகொண்டிருக்கிருர்; பிரிந்துவிடப் போகிறதே என்று கவலைப்படுகிருர்.

திராவிடநாடு திராவிடருக்காக வேண்டும் என்ற உரிமை முழக்கம் தனக்குப் பிடிக்காது - அதற்காகக் கவலைப்படுகிறேன் என்கிருர் கவர்னர்.

இன்று இந்தியா முழுவதையும் டில்லி மத்திய சர்க்கார் ஆண்டு வருகிறது. வெள்ளையன் காலடி

திராவிடநாடு திராவிடருக்கென்ருல், அதன் பொருள் வடநாட்டுடன் வம்புக்குப் போகிருேம் என்பதல்ல பொருள், இங்கு வசூலாகும் வரிப்பணத்தைக் கட்டிவிட்டு கடன்காரர்போல் கைகட்டி நாம் ஏன் வாழவேண்டும் என்ற உணர்வு! கொழித்திருக்கும் செல்வத்தை - மக்களின் உழைப்பை மூலதனமாகக்கொண்டு நாம் ஏன் தனித்து வாழக்கூடாது என்ற ஆசை! திராவிடத்தின் அரசியலிலே வாழ்விலே பொருளியல் வளத்திலே யாருடைய தலையீடும்-மேற்பார்வையும் கூடாதென்பதே நம் குறிக்கோள்! இருதயகீதம்! இலட்சிய முழக்கம்! இந்த வாழ்விழந்தோரின் வாழவேண்டுமென்ற ஆசையைக் கண்டு கவலைப்படுகின்ருராம் கவர்னர் பெருமான்!

முதல் வரியில் வடக்கு தெற்கின் மீது ஆதிக்கம் செலுத்துகிறது. என்று கூறிவிட்டு,

தெற்கு வடக்கை வெறுப்பதை நான் உணர்கிறேன் என்று இரண்டாவது வார்த்தை பேசி,

ஐயோ! பிரிந்துபோவதா-வேண்டாம்-வேண்டாம் என்று கவலைப்

★ அப்பாவிக் கவர்னருத்கு இப்போதுதான் புரிகிறது ! ★

அளவிற்கு நாம் பழம்பெருங்குடிகள். வெள்ளையன்கால்வைப்பதற்கு முன், இங்கு எவர் ஆதிக்கமும், இல்லை. குப்தர்கள், மௌரியர், ஆண்டனர் வடக்கை. அவர்களால் தெற்கில் நுழைய முடியவில்லை. மாவீரன் அலேக்சாண்டர், கஜனி, கோரி, பாமர், நாதர்ஷா, அக்பர், அசோகன், இப்படிப் பலப்பலர் என்ருலும் தென்னுட்டில் அடிவைக்க முடியவில்லை அவர்களால். எவரும் நம்மை அடிமைப்படுத்தியதில்லை; கேடு சூழ்ந்ததில்லை. நாம் நாகரீகத்தின் உச்சாணியில் நின்றபோது உலக நாடுகள் பல இழிநிலையில்இருந்தன. அரப்பாமொசச்சதாரோ, பாபிலோனியப் புராதனச் சின்னங்கள் நம் மாண்பினை சிறப்பிக்கின்றன. மரப்பட்டைகளையும், இலைகளையும் மனித இனம் உடுத்திக்கொண்டிருந்தபொழுதே எகிப்திய எழிலரசிகளின் அங்கங்களை அழகுபடுத்தும் தங்கக்கவசங்கள் கட்டிப் பவளம்-மணி-முத்து மெல்லிய பட்டு-மஸ்லின் இவற்றைதமிழகம் அனுப்பிப்பூரித்து. அலைகடல்

பதற்காக வலுமிகுந்த இயக்கங்கள் இருக்கின்றன."

"இந்த நிலை குறித்து நான் கவலைப்படுகிறேன்."

இந்திய உபகண்டத்து சரித்திரம் முழுவதும் வடநாட்டு வரலாருகவே இருப்பதையும், அதில் தென்னுட்டு சம்பவங்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதையும் கூறிவிட்டு, நாகரீக மிக்க திராவிடர்களிடமிருந்து, வடநாட்டார் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் நிறைய இருப்பதாகவும் கூறியபின் கவர்னர் பெருமான் மேலே தரப்பட்ட உண்மைகளைக் கக்கி இருக்கிருர். உண்மையை எத்தனை காலம் மறைக்கமுடியும்?

தென்னுட்டின்மீது வடநாடு ஆதிக்கம் செலுத்துகிறது. கவர்னரின், அதிலும் ஒரு வடநாட்டு மனிதரின்பேச்சு. ஆனுல், இதையே நாம் கூறும்போது இங்குள்ள சிலரின் முகங்களில் எள்ளும் கொள்ளும் வெடிப்பதைக் காண்கிருேம்.

வடநாட்டு ஆதிக்கம் எந்த உருவிலும் திராவிடத்தில் இருக்கக் வைக்கும்பொழுது இப்பொழுது இருப்பதைப்போல் மாகாணப் பிரிவினைகளோ 'இந்தியா' என்ற ஒரே தேசம் இல்லை என்பது அறிந்ததே! 'இந்தியன்' என்ற வார்த்தையைக் கொண்டு உரிமைக்கிளர்ச்சி எழுப்பியது காங்கிரஸ் கட்சி. அந்தக்கட்சியின் தலைவர்கள் முன்னேடும் பிள்ளைகள் வடநாட்டவர்களாகவே இருந்தனர். வடநாட்டுத் தலைவர்களின் செல்வாக்கு வளர்ந்தது. எனவே, வெள்ளையர் வெளியேறியதும் ஆட்சி வடவர் கைக்கு மாறியது. எத்துறையிலும் வாழ்வு அவர்கள் பக்கம் வளமடைந்து வருகின்றது. தென்னுட்டைச் சார்ந்தவர்களுக்கு பதவிகளில் ஆசை காட்டி எல்லோரும் ஒரே நாட்டவர் என்று மயக்கு மொழி பேசி வருகின்றனர். இந்த தந்திரமான ஏற்பாட்டிற்கு நம்மவர் சிலர், இனம் மறந்து-உரிமை இழந்து அடிமையாக வாழ்கின்ருேம் என்பதையும் உணராமல் திராவிட நாடு திராவிடருக்கே என்ற லட்சியத்தைப் புரிந்துகொள்ளாமல் இருக்கின்றனர்.

படுகிருர் கவர்னர். காரணம், எதேச்சாதிகார வெறி! வளமிக்க நிலத்தை விட்டுவிடுவதா என்ற பேராசை! கிடைத்ததை சுருட்டுவோம் என்ற தந்திரம்! சொல்லுக்குச் சொல்முரண்! கருத்துக் குழப்பம்! பொதுவாக தேசிய முகாமில் இருப்பவர்களிடம் குறிப்பாக வடநாட்டுத் தலைவர்களிடம் இந்த வியாதி வளர்ந்து வருகிறது. இதன் பொருள் எங்களிடம் நியாயம்-நீதி - நேர்மை எதுவுமில்லை என்பதுதான்.

நாம் வளர்ந்துவிட்டோம்! வலுப் பெற்றுவிட்டோம்! மூலவர்கள் உணர்ந்துவிட்டார்கள்! உள்ளுக்குள் 'கிலி', 'பிரிவினை' வந்துவிடுமோ என்ற பயம் அவர்களிடம் குடிபுகுந்துவிட்டது.

விடுதலைக் கிளர்ச்சியை எத்தனை காலம்தடைசெய்யமுடியும்? 'போலி நேசமும், மயக்குவாதங்களும்பயன்படாது இனிமேல்எனக்கூறுகிருேம் கவர்னருக்குக்கவலை! காரணம்?

நாம்வளர்ந்துவிட்டோம்! வலுப் பெற்றுவிட்டோம்! வெற்றி நிச்சயம் என்பதுதான்!

★ திராவிட இயக்கத்தின் பலம் மிக அதிகம்! ★

எண்ணம்

கண்ணதாசன்

பெரிய பெரிய தொழிற்சாலைகளும், வேலைத் திட்டங்களும் உருவாக்கப்படுவதில் நம் மாநிலத்திற்கு உரிய பங்கு கிடைப்பதில்லை. சர்க்காரின் தேசியத் திட்டங்களில் இடம் பெறும் பெரிய தொழிற்சாலைகள், விஞ்ஞான ஆராய்ச்சி நிலையங்கள் முதலியன தென்னாட்டிலும் ஏற்படுத்த வேண்டும். இது அம்புஜம்மாளின் ஆவடிப் பேச்சு: இதே கருத்து இதற்கு முன்னும், தேசிய முகாமில் இருக்கும் சில முக்கியஸ்தர்களால் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

வடநாடு தென்னாட்டைப் புறக்கணிக்கிறது. காங்கிரஸ் ஆட்சியில் வடநாட்டுக்குத்தான் சலுகைகள் அதிகம் தரப்படுகின்றன. நேரு சர்க்கார் ஓரவஞ்சனையாக நடந்துகொண்டு பெரும் திட்டங்களையெல்லாம் வடநாட்டிலேயே நிறைவேற்றி, தென்னாட்டை அலட்சியம் செய்துவிடுகிறது. இதனால் வடக்கு என்றும்போல் வளம் கொழிக்கிறது. தெற்கு தேய்கிறது. இதை நாம் ஆயிரமாயிரம் மேடைகளில் விளக்கியிருக்கிறோம்.

என்றாலும் சர்க்கார் கேளாக்காதினர்களாகவே இருந்து வருகின்றனர். அதோடு தென்னாட்டை வடநாடும், வடநாட்டு தனிப்பட்ட முதலாளிகளும் சுரண்டுவதை ஒப்புக்கொண்டு, நாமெல்லாம் ஓரினம், நமக்குள் பிரிவு ஏன்? பிளவு ஏன்? என்று தொண்டை கிழியப் பேசி வருகிறார் நேரு. உலக நாடுகள் ஒவ்வொன்றும் வாழவேண்டிய முறைக்கு இலக்கணம் வகுக்கும் பண்டிதர், உலகத்தின் மற்ற நாடுகளுக்கு நீதிகூறும் பண்டிதர், இவைகளைக் கவனிப்பதில்லை. காரணம், சுயநலமும், ஏகாதிபத்திய வெறியும் அவரை கண்மூடியாக்குகிறது.

இன்று டில்லியில் வடக்கு—தெற்கு என்று வாயெடுத்தவர்களெல்லாம் விரட்டப்பட்டிருக்கிறார்கள். அடிக்கடி தென்னாட்டைப் பற்றி பேசினாலும், இந்த மாநிலத்திற்கு உரிய பங்கு கோறினாலும், அவர்களையெல்லாம் ஒன்று பதவி உயர் கொடுத்து வாயடைக்கச் செய்து விடுகிறது; இல்லாவிடில் பதவியிலிருந்து உருட்டிவிடுகின்றது டில்லி! இப்படி உரிமைக் குரல் எழுகின்ற போதெல்லாம் நசுக்கப்பட்டே வந்திருக்கிறது. இந்த நிலைமைகளையும் நாம் பல முறை ஏடுகளில் எழுதி விளக்கி வந்திருக்கிறோம். இதே கருத்தை சென்னை நிதியமைச்சர் கோவையை அடுத்த பெரியநாயகன்பாளையத்தில் நடைபெற்ற ஐந்தாண்டு திட்ட விவாத அரங்கில் பேசும்போது எடுத்துக் கூறி இருக்கிறார். அதாவது முதலாவது ஐந்தாண்டு திட்டத்தில் அமுல் செய்யப்பட்ட பெரும் நீர்தேக்க திட்டங்கள் எல்லாம், சாதகமான முறையில் அமைந்துள்ள குறிப்பிட்ட பிரதேசங்களுக்கே பலன் தந்திருக்கிறது- மூலப்பொருள்கள் கிடைக்கும் இடத்திற்கு அருகிலேயே பெரும் தொழிற்சாலைகளை அமைப்பது என்ற கொள்கையை அப்படியே பின்பற்றினால் சாதகமான முறையில் அமைந்துள்ள பகுதிகளில் செல்வம் குவியும் நிலை ஏற்படும்; அதனால் நாட்டில் காணப்படும் அரசியல் சூழ்நிலையில் எதிர்மாறான விளைவுகள் ஏற்படும்; ஆகவே தென்னாட்டிலும் சில பெரிய தொழிற்சாலைகளை—மின்சார சாதனங்களைத் தயார்செய்யும் தொழிற்சாலைகள் போன்றவைகளை அமைப்பது பொருத்தமானதாகும். தென்னாட்டில் கிடைக்கும் இரும்பைப் பயன்படுத்தி—நெய்வேலி நிலக்கரியை அடிப்படையாகக் கொண்டு இரும்புத் தொழிற்சாலை ஒன்றை தென்னாட்டில் அமைப்பது பற்றிய வாய்ப்புகளை திட்டக்குழு பூரணமாக ஆராயுமென்று நம்புகிறேன். இதன்மூலம் தென்னாட்டின் இரும்பு எஃகு தேவைகளை இங்கேயே உற்பத்தி செய்துகொள்ளும் நிலை ஏற்படும்! இவ்வளவு கருத்துக்களையும் நிதியமைச்சர் சுப்பிரமணியம்தான் பேசினாரா என்ற வியப்பு நமக்கு ஏற்படுகிறது. என்றாலும் நல்லவர்கள் எல்லோரும் எந்த முகாமில் இருப்பவர்களானாலும் ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மையைத்தான் பேசியிருக்கிறார் என்பது நமக்கு ஆறுதல் அளிக்கிறது; முதலாவது ஐந்தாண்டு திட்டத்தில் தென்னகத்திற்கு உறுப்படியான நன்மை ஒன்றும் இல்லையென்றும், குறிப்பிட்ட சில பகுதிகளுக்கே பலன் தந்திருக்கிறது என்று சலிப்படைந்து, செல்வமெல்லாம் குறிப்பிட்ட பகுதிகளிலேயே குவிந்து போகிறது என்ற உண்மையைக் கூறி, நிலைமை இப்படியே போய்க்கொண்டிருந்தால், அதாவது வடக்கை வாழவிட்டு, தெற்கை புறக்கணித்தபடியே மத்திய சர்க்கார் சென்றுகொண்டிருந்தால் நமக்கு விரோதமான அரசியல் விளைவுகள் ஏற்படும் என்று 'வரும் பொருள்' உரைத்திருக்கிறார் கனம் சுப்பிரமணியம்.

வடக்கு வாழ்கிறது என்று கூறத்துணிவு இல்லாமல் குறிப்பிட்ட பகுதிகள் என்றும், வடநாட்டு ஏகாதிபத்தியத்தை எதிர்த்துவரும் திராவிட இயக்கத்தினர் என்று வெளிப்படையாகக்கூறாமல் நமக்கு விரோதமான அரசியல் விளைவுகள் என்றும், கூறி இருக்கிறார் மந்திரியார்; எது எப்படியோ நிலைமையை விளக்கி இருக்கிறார். இத்தனை நாட்களாக இதயத்தின் அடித்தளத்திலே புதைந்துகொண்டிருந்த உண்மை வெளிப்பட்டிருக்கிறது. இந்த உண்மைகளை டில்லி தெரிந்துகொள்ளாமல். இல்லை தெரிந்தே மறைத்து வந்திருக்கிறது. இந்நிலையில் மந்திரியாரின் பேச்சு செவிடன் காதில் ஊதிய சங்காகத்தான் முடியும்; மந்திரியார் இந்தக் கருத்துக்களை தென்னாட்டு மக்களின் கண்துடைப்புக்காக கூறியிருப்பாரோ என்ற சந்தேகம் எழுகின்றது. அப்படி ஒருவேளை மனந்திறந்து முழு உள்ளத்தோடுதான் மேற்சொன்ன கருத்துக்களைக் கூறியுள்ளார் என்றால் இவர் இருக்கவேண்டிய முகாம் காங்கிரஸ் அல்ல!

சிறுபொருள் விளக்கம்: 8

★ தார் ★

தாரிலிருந்து ஆயிரக்கணக்கான வர்ணப் பொருள்கள் பிரித்தெடுக்கப்படுகின்றன. வர்ணப் பொருள்கள் மாத்திரமல்லாமல், இன்னும் அநேக விதமான விசித்திர விளைவுகளை உண்டுபண்ணக்கூடிய பொருள்கள் அடங்கிய, ஓர் பெரும் களஞ்சியம்போல் தார் இருக்கிறது. ஒவ்வொரு வருடமும் கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமான மருந்துகள் தாரிலிருந்து தயார் செய்கிறார்கள். மருந்துகள் மனிதன் பிரமிக்கத்தக்க விளைவுகளை உண்டு பண்ணுகின்றன.

ஆப்ரிகா தேசத்தில் விசேஷமாக பாதித்துவரும் மஞ்சள்ஜுரத்தைத் (yellow fever) தணிப்பதற்கு தால்லின் (Thallin), கெய்ரின் (kairin) என்ற மருந்துகளை உபயோகிக்கிறார்கள். இவைகளைத் தாரிலிருந்து தயார் செய்கிறார்கள். இம்மருந்துகள் ஜுரத்தைத் தணிப்பதில் மிக உபயோகமாக இருந்தாலும், அவைகளே விஷத்தன்மையனவாயிருப்பதால், உடலுக்கு அவற்றால் பின் வரும் தீங்கு மஞ்சள் ஜுரத்தைக் காட்டிலும் கொடுமையாக இருக்கிறது. களைப்பைத் தீர்க்கவும், ஆழ்ந்த தூக்கத்தை உண்டு பண்ணவும் சல்ஃபொனால் (sulphonal) போன்ற மருந்துகளை உபயோகிக்கிறார்கள். இவைகளும் தாரிலிருந்தே தயாரிக்கப்படுகின்றன.

தார் வைத்தியத் துறையில் வேறு எந்தெந்த வழிகளில் உபயோகிக்கப் படுகின்றன என்று கவனிப்போம். உடலின் வெளிப் பாகங்களில் சஸ்திரப் பிரயோகம் செய்யும்பொழுது உடலில் வலி தெரியாமல் இருப்பதற்காக வைத்தியர்கள் ஸ்டோவெய்ன் (stovaine), கொக்கேய்ன் (cocaine). நொவோ கொக்கேய்ன் (novo-cocaine) போன்ற மருந்துகளை உபயோகிக்கிறார்கள். இவைகளும் தாரிலிருந்தே தயார் செய்யப்படுகின்றன.

தாரிலிருந்து தயாரிக்கப்படும் வாசனைச்சாமான்களும் இயற்கையிலுள்ள புஷ்பங்களிலிருந்து கிடைக்கும் வாசனைப் பொருள்களோடு போட்டி போடக்கூடியதாகவே இருக்கின்றன. தாரிலிருந்து பிரித்தெடுக்கப்படும் பொருள்களில் ஒன்றாகிய 'குமாரின்' (coumarin) என்பதிலிருந்து Dr. பேர்க்கின் என்பவர் ஒருவிதமான புற்களிலிருந்து வரக்கூடிய வாசனையைப் போல் மணம் வீசக்கூடிய பொருள் ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறார். முன் காலத்தில் மோரிஷஸ் (Mouritius), கோர்டிலெராஸ் (Cordilieras) முதலிய தேசங்களில் வனில்லா அவரை (vanilla bean) என்பதிலிருந்து ஒரு உயர்ந்த வாசனைச் சாமான் தயார்செய்து வந்தார்கள். தற்சமயம் இத்தொழில் அழிந்துபோய், தாரிலிருந்து எடுக்கப்படுகிற வனில்லின் (vanillein) என்ற பொருள் வழங்கப்பட்டு வருகிறது. தாரிலிருந்து வாசனைச் சாமான்கள் உற்பத்தி செய்யும் தொழிலில் ரசாயன சாஸ்திரி எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறான் என்றால், ரோஜாப் புஷ்பத்திலிருந்து பிரித்தெடுக்கக்கூடிய இருபது வாசனைச் சாமான்களையும் லீப்ஸிக்கில் (Leipzig) உள்ள தொழிற்சாலைகளில் தயார் செய்கிறார்கள். இதோடல்லாமல் மல்லிகை போன்ற அநேக விதமான புஷ்பங்களிலிருந்து கிடைக்கக்கூடிய வாசனைச் சாமான்கள் அவ்வளவும் தற்காலம் தாரிலிருந்து தயார் செய்கிறார்கள். தற்சமயம் ஜெர்மனியிலிருந்து மாத்திரம் வருடம் ஒன்றுக்குச் சுமார் 2 லக்ஷம் பவுன் பெறுமான வாசனைச் சாமான்கள் உற்பத்தி செய்கிறார்களாம்.

நாகரிக மனிதனின் இன்பவாழ்விற்குக்காரணமாக இருக்கிற பல பொருள்களும் தாரிலிருந்து எடுக்கிறார்கள் என்று பார்த்தோம். இதே தாரிலிருந்து மனிதனுக்குத் துன்பத்தையும், நாசத்தையும் விளைவிக்கக்கூடிய வெடி மருந்துகளும் தயார் செய்கிறார்கள். லிட்டைட் (Lyddite) என்ற வெடிகுண்டு ஒரு மலைச் சாரலில் பட்டால் அநேக பெரும் பாறைகள் பறப்பதைக் காணலாம். இதிலிருந்து தாரில் எவ்வளவு அபரிமிதமான சக்தி பதிந்து கிடக்கிறதென்று தெரியவரும்.

நாகரிக வாழ்விற்கு வேண்டியிருக்கிற மைகள் (inks), ஒளிப்படம் எடுக்கும் தொழிலில் உபயோகப்படுகின்ற அநேக விதமான டெவெலப்பர்களும் (developer) பலவிதமான வார்னீஷ்களும், ஆம்பர்களும் (ambers), மின்சார அல்பவாஹிகளும் (electrical insulators), தாரிலிருந்து தற்காலம் தயார் செய்கிறார்கள்.

திருமணம்

18-2-55 வெள்ளி காலை 9 மணியளவில் திரு. போளூர். **சுப்பிரமணியம்** அவர்களின் மகள் திருமதி. **S. துர்காவிற்கும்** சென்னை திரு. **K. வாசுதேவன்** அவர்களுக்கும் **அறிஞர் அண்ணா** அவர்களின் தலைமையில் சென்னை வைத்தியநாத முதலி தெரு, 35, எண்ணுள்ள இல்லத்தில் திருமணம் நடைபெறும்.

இலக்கியப் பரிசு

ரூ. 2000

பரிசுத் திட்டம், இது பற்றிய முழு விபரமும் **26-2-55** இதழில் வரும்.

இட்லரின் கடைசி நாட்கள்!

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இட்லர் மாறுபட்டுக் காட்சியளித்தான். அதனால் தலைமை அலுவலகத்திற்கு அடிக்கடி செல்வதைக் குறைத்துக் கொண்டேன் நான். ஆனால், நீண்ட நாட்கள் நான் போகாமலிருந்து விட்டால் "ஆப்மன் இல்லையானால், இங்கு ஏதோ குறைபாடு இருப்பது போல் தோன்றுகிறது," என்றும், "ஆப்மன் இல்லாமல் இனி என்னால் வாழ முடியாது" என்றும் சொல்லுவானும்.

இம்மாதிரி எண்ணம் தோன்றியதுமே உடனே வந்து பார்க்கும்படி அடிக்கடி இட்லர் எனக்கு தகவல் அனுப்புவான். நான் மூனிச்சிலிருந்து பறந்தோடிச் செல்வேன்.

"என் அழைத்தாய்?" என்று கேட்பேன்.

"செய்தி ஒன்றுமில்லை! உன்னைப் பார்க்க விரும்பினேன்; அழைத்தேன்" என்பான் இட்லர். சிறிது நேரம் அவனுடன் அளவளாவி விட்டு மூனிச் நகரம் திரும்பி விடுவேன்.

நான் திடீரென்று வந்து போவதைக் கண்ட **போர்மன்** ஆத்திரமடைந்தான். இட்லர்மீது போர்மன் கொண்டிருந்த ஆதிக்கம் அதனால் தகர்ந்து விடுமோவெனப் பயந்தான். தேசத்தின் பாமர மக்கள் என்ன நினைக்கிறார்கள், என்ன பேசுகிறார்கள் என்பதை இட்லரின் கவனத்திற்கு நான் கொண்டு வருவேன். இட்லர் அதை நம்புவான். இதைத் தடுக்க போர்மன் முனைந்தான்.

ஆனால், இட்லரின் முன்னால் என்னைப் பகைத்துக்கொள்ள போர்மனால் முடியவில்லை. இதற்கு ஒரு சூழ்ச்சி வலை பின்னினான். 1944-ல் இலையுதிர் காலத்தில், போர்மன் என்னைப் பார்க்க வந்தான்.

"ஏன் மெலிந்து காணப்படுகிறீர்கள்? உங்கள் உடல் நலனைப் பொறுத்த வரையில் இட்லர் கூட மிகவும் அக்கரை காட்டுகிறார். நீங்கள் டாக்டரிடம் உடம்பைக் காட்டுங்கள்" என்று கனிவாகச் சொன்னான்.

"நான் நன்றாகத்தான் இருக்கிறேன், இட்லர் விரும்புகிறாரென்றால் டாக்டரிடமும் உடம்பைக் காட்டுகிறேன்" என்றேன்.

டாக்டர் மோரெலினால் கூட, என்னிடம் வியாதி எதுவுமிருப்பதாகத் தெரிந்கொள்ள முடியவில்லை. ஆனால், எஸ். எஸ் சுகாதார நிலையத்திலிருந்து எனது இரத்த பரிசோதனையின் முடிவு தெரியும் வரை அவர் எதுவும் கூற மறுத்து விட்டார்.

பதினைந்து தினங்களுக்குப்பிறகு ஒரு நாள் நான் மூனிச்சிலிருந்த பொழுது, டாக்டர் மோரெலிடமிருந்து டெலிபோன் மூலம் ஒரு அவசரச் செய்தி கிடைத்தது.

திடுக்கிடச் செய்யும் அச்செய்தி இதுதான்: "நீங்கள் இட்லருக்கு முன்னால் ஆஜராவதோ, 'தலைமை அலுவலகத்திற்கு வருவதோ, தற்சமயம் நமது சர்வாதிகாரிக்கும்-எங்கள் எல்லோருக்குமே அபாயம் என்று இட்லர் கருதுகிறார், என்பதை போர்மன் கட்டளைப்படி உங்களுக்குத் தெரிவிக்கிறேன்."

இச்செய்தி எனக்கு இடி விழுந்தாற்போலிருந்தது.

"நீங்கள் சொல்வது எனக்கு ஒன்றும் புரியவில்லையே!" என்றேன்.

"உங்கள் இரத்தத்தில் விஷகாய்ச்சல் நோய் கிருமிகள் காணப்படுவதாக எஸ். எஸ். சுகாதார நிலையம் அறிவித்திருக்கிறது. ஆனால் என்னைப் பொறுத்த வரையில் உங்கள் உடம்பில் அம்மாதிரி எதுவுமில்லை என்றே கருதுகிறேன். ஆனால் என் வேண்டுகோளுக்கு போர்மன் செவிசாய்க்க மறுப்பதால், என் கடமைப்படி இத்தகவலை உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்றார் டாக்டர் மோரெல்.

நான் நிலை கலங்கி மௌனம் சாதித்தேன்.

டாக்டர் மேலும் கூறினார்; "உங்கள் நிலைக்கு நான் வருந்துகிறேன். பாராடய்பஸ் பி. (**Paratyphus B.**) என்ற வியாதிக்கு நீங்கள் ஆளாகி விட்டீர்கள். போர்மனுக்கு விரோதமாக நான் எதுவும் செய்ய முடியாது. நாளை மூனிச் வைத்திய நிலையத்தார் உங்களை அழைத்துச் சென்று, இட்லர் உத்தரவுப்படி விசேஷக் கட்டிடத்தில்-ஒரு சிறந்த மாளிகையில்-வைத்து, உங்களை மிகவும் நன்றாகக் கவனிப்பார்கள்."

டாக்டர் மோரெல் டெலிபோனைக் கீழே வைத்து விட்டார். நான் ஒரு கலைக்களஞ்சியத்தை(**encyclopedia**) புரட்டிப்பார்த்தேன். "பாராடய்பஸ்பி.-மிகவும் அபாயமான வியாதி. இந்த வியாதியுள்ளவர்கள் பொது மக்களுக்கு அபாயம் விளைவிக்கிறவர்கள். இவர்கள் பொது மக்களிடம் நெருங்கிப் பழகுவதை தடுக்கவேண்டியது மிகவும் அவசியம்" என்று அதில் கண்டிருந்தது.

விஷக்கிருமிகள் என்றால் இட்லருக்கு எப்போதுமே பயம். இதை அடிப்படையாக வைத்துக்கொண்டு, தன்னுடைய செல்வாக்கின் மூலம் போர்மன், என்னை இட்லரிடமிருந்து பிரிக்கச் செய்த சூழ்ச்சிதான் இது. இதற்காக டாக்டர் மோரெலைக் குற்றம் சாட்டுவதில் பயனில்லை என்று தீர்மானித்தேன்.

நான் உடனடியாக இட்லரின் காதலியான ஏவாபிரான் வசிக்கும் **வாசன் பர்க்ஸ் டிரேஸி** 12-ம்நம்பர் இல்லத்தை அடைந்தேன். விபரத்தை அவளிடம் தெரிவித்தேன்.

"பயப்படாதீர்கள்! வழக்கம் போல இன்று இரவு நான் இட்லருக்கு டெலிபோன் செய்வேன். அதுசமயம் இதைப்பற்றியும் பேசுகிறேன். சதி செய்வதில் போர்மன் கெட்டிக்காரன் என்பது எனக்குத் தெரியும்" என்றாள் ஏவா.

"நீங்கள் இட்லரிடம் பேசும் பொழுது, என் விஷயத்தை விளக்கிச்சொல்லி விடுங்கள். அத்துடன், என் மனைவியை சந்திக்க நாளைக்கு நான்வீயன்னாவிற்குசெல்வதாகவும் சொல்லுங்கள். இல்லையானால் நான் தப்பியோடிவிட்டதாக நினைப்பார்கள்" என்றேன் நான்.

"அதுபற்றி அலட்டிக்கொள்ள வேண்டாம். நீங்கள் நாளைக்கு வீயன்னாவிலிருந்து டெலிபோன் செய்யுங்கள். அப்போது நான் விபரம் அறிவிக்கிறேன்," என்றாள் ஏவா!

வீயன்னாவில், என் மனைவி என்னைப் பார்த்ததும் ஆச்சரியப்பட்டாள்.

"மூனிச் நகரத்திலுள்ள அத்தனை பேருமா பைத்தியம்பிடித்தவர்களாகி விட்டார்கள்? நேற்று, நீங்கள் இங்கு எப்போது வரப்போகிறீர்கள் என்று கேட்டு போன் செய்தேன். நீங்கள் ஆபத்தான வியாதியால் அவதிப்படுவதாகவும், அது பற்றி எனக்குத் தகவலே தெரிவிக்கக் கூடாதென்று மேலிடத்திலிருந்து கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருப்பதாகவும் தெரிவித்தார்கள். உடனே நான் மூனிச் நகரத்திற்குப் புறப்படத் தயாரானேன். அப்பொழுது தான் நீங்கள் வீயன்னாவிற்குப் புறப்பட்டு வருவதாகத் தகவல் கிடைத்தது. பைத்தியக்காரர்கள் அவர்களா? நானா?" என்று கேட்டாள் என் மனைவி.

"எனக்கு விஷநோய் இருப்பதாக புனைந்துரைக்கிறார்கள். தலைமை அலுவலகத்திற்கு போகாமலும் என்னைத் தடை செய்திருக்கிறார்கள்" என்றேன்.

"போர்மன் தான் இதற்குக் காரணம் என்று நினைக்கிறேன்" என்று கூறிவிட்டு, அவளுடைய நண்பரான **டாக்டர் டெம்மரை (Dr. Demmer)** உடனே வரும்படி போன் செய்தாள். டாக்டர் டெம்மர் எனக்கு வியாதி எதுவுமில்லை என்று சொல்லிவிட்டார்.

நான் ஏவாபிரானுக்கு போன் செய்து, இட்லர் என்ன தெரிவித்தார் என்று கேட்டேன்.

"உங்களுக்கு விஷநோய் இருப்பதாக இட்லர் முழுதும் நம்பியிருக்கிறார். அவருடைய அபிப்பிராயத்தை என்னால் மாற்றவே முடியவில்லை. வீயன்னாவிற்குப் புறப்படு முன்பு நீங்கள் என்னை வந்து பார்த்ததாகக் கூறினேன். நீங்கள் வந்ததற்காக மிகவும் கோபித்துக் கொண்டார். உங்களுடைய நோய் மற்றவர்களுக்கும்பரவிவிடும் என்று பயப்படுகிறார். இதையெல்லாம் பார்க்கையில் போர்மனின் சூழ்ச்சி நன்றாக வேலை செய்திருக்கிறது என்றே நினைக்கிறேன். இனி என்னால் எதுவும் செய்யமுடியாததற்கு வருந்துகிறேன் ஆப்மன்!" என்று கூறி, டெலிபோனைக் கீழே வைத்து விட்டாள் ஏவாபிரான்.

நான் வீயன்னாவிலுள்ள **லெயன்ஸ் வைத்திய நிலையத்திற்குச் சென்று என்னைப் பரிசோதித்துக் கொண்டேன். ஒரு வாரத்தில்** மூன்று பரிசோதனைப் பத்திரங்கள் (**Certificates**) அளித்தார்கள்.

மூன்றிலும் "விஷநோய் இல்லை-விஷக்கிருமிகள் இல்லை" என்றுதான் கண்டிருந்தது.

இந்தப் பத்திரங்களைப் புகைப்படமெடுத்து இட்லருக்கு உடனே அனுப்ப நினைத்தேன். ஆனால் என் மனைவி தடுத்துவிட்டாள். "அவசரப்படாதீர்கள்! ஒன்றிரண்டு மாதம் கழியட்டும். அதற்குள் விவகாரமும் பழமையாய்விடும். இல்லையானால் போர்மன் வேறு சூழ்ச்சியில் இறங்கிவிடுவான்" என்றாள்.

ஆனால், இந்த விஷயங்களைப் பற்றி உடனே டாக்டர் மேரெலுக்கு எழுதினேன். பல வாரங்களுக்குப்பின் தலைமை அலுவலகத்திலிருந்து கமிஷனர் ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில் "உங்களுடன் தொடர்பு கொண்டுள்ளவர்கள் ஒவ்வொருவரையும் விசாரிக்கவும், அவசியமானால் கைது செய்யவும் எனக்கு அதிகாரம் வழங்கியிருக்கிறார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று காணப்பட்டது.

இரண்டு அரசாங்க வைத்திய நிலையங்களில், எஸ். எஸ். பண்டியினரால் வைத்தியப்பரிசோதனைக்கு அனுப்பப்பட்டேன். ஆனால், எனக்கு எந்த வியாதியுமே இல்லை என்று பத்திரங்கள் வழங்கப்பட்டன.

சுமார் ஆறு மாதங்கள் சென்றன. இட்லரைச் சந்திப்பதென்று தீர்மானித்தேன். 1945-ஏப்ரலில் தலைமை அலுவலகத்திற்குச் சென்றேன். விமானக்குண்டு வீச்சினால் பல பகுதிகள் பாழாக்கப்பட்டிருந்தும் தினசரி வேலைகள் ஒழுங்காக நடைபெற்றுக்கொண்டிருந்தன. நான் பெர்லினுக்குச் சென்றால் வழக்கமாகத் தங்கும் **கெய்சிராய் ஹோட்டல்** இடிந்து தரை மட்டமாகிக்கிடந்தது.

(அடுத்த இதழில் முடியும்)

உங்கள் வாடிக்கைக் கடைக்காரரிடம் கேளுங்கள்!

T.RADE MARK

திராவிட பீடிகளை

இப்போது திராவிடமெங்கும் கிடைக்கின்றன.

விபரங்கட்கு,

திராவிட பீடி அலுவலகம்

தெப்பக்குளம் : : திருச்சி

தும்பி என்னைச் சாடுகிறார். கொஞ்ச நாட்களாக நான் அழுத்தமான காதல் பற்றி எழுதுவதில்லையாம் ! மேலோட்டமாகவே போகிறேனும் ' '' இது யாருக்கு வேண்டும் !'' என்கிறார்; '' எல்லோருக்கும் ! இது தெரியும் ?'' என்கிறார். '' விறலி விடு தூதுபோல எழுதுங்கள்;'' என்கிறார்.

'' அதற்காக, ஆபாசமாகப் போகலாமா ?'' என, நான் கேட்கிறேன்! "எது ஆபாசம் ?'' என்று பெரு விளக்கம் கொடுக்கிறார். பலருக்குத் தெரியாத இலக்கியங்களை எடுத்துத் தரக் கோருகிறார். அதன் படி, தேடிப் பார்த்ததில் என்க்குக் 'கூளப்ப நாய்க்கன் காதல்' கிடைத்தது. அதே சுப்ரதீபக்கவியின் கை வண்ணம்தான் இதுவும்!

'' பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் நிலக்கோட்டைப் பாளையக்காரனாக இருந்தவன் கூளப்ப நாய்க்கன்! இவனுக்கு நாகம கூளப்பன், பெரிய நாகேந்திரன், பெரிய நாயக்கன் எனப் பல பேருண்டு! மதுரை நாயக வம்சத்தை நிலை நாட்டிய விசுவநாத நாயகனின தந்தை பெயர் நாகம நாயகன் என நாயக்க வம்ச வரலாறு கூறுகிறது. எனவே, இவன் பெயருக்கு முன்னாலே 'நாயக' என்று வருவதால் கூளப்பன் விசுவநாதனின பரம்பரையிலே வந்தவனாக இருக்கலாம்,'' என்று இவன் வரலாறு பற்றி திரு; மு. அருணாசலம் குறிப்பிடுகிறார்.

இவனைப் பாட்டுடைத்தலைவனாக் வைத்து, விறலிவிடு தூதுபோலவே, '' அட கூளப்பா! உன்னையே நெனச்சு உருகுருள்டா ஒரு மாது! நீ காட்டுக்குப் பேனேடா! அவள் உன்னைக் கண்டாளடா; கட்டிப்பிடித்தாளடா; முத்தம் கொடுத்தாளடா; என்னென்னமோ பேசினாளடா !'' என்றெல்லாம் சிற்றின்ப ரசம் ததும்பப் பாடிய காவியம்தான் கூளப்ப நாயக்கன் காதல் !

கூளப்ப நாயகனின் நாட்டைப் பற்றி சுப்ரதீபக்கவி வர்ணிக்கிறான். எல்லா ஊர்களிலும் ஆறு வெறும் தண்ணீராக வல்லவா ஓடும்; இவனுடைய நாட்டிலே பெண்கள் குளிக்கிற மஞ்சள், குங்குமம் கலந்த நீர் ஆறாக ஓடிப் பயிரை வளர்த்ததாம். இதிலே கவி இரண்டு பெரிய சந்தேகங்களைக் கிளப்புகிறான் !

ஒன்று, அந்த ஊரிலே இருந்த பெண்கள், ஒரு அடிகனத்திற்கு மஞ்சளைப் பூசிக்கொண்டு, குங்குமம் இட்டுக்கொண்டு குளித்தார்களா, அல்லது, தமிழ்நாட்டுப் பெண்களெல்லாம் அங்கேயே 'ஸ்டாக்காக' இருந்து குளித்தார்களா? அவர்கள் குளித்த நீரே ஒரு ஆறாகவும், அதுவும் மஞ்சள் நிறத்து ஆறாகவும் ஓடுவதானால், அங்கே எவ்வளவு பெண்கள் இருந்திருக்க வேண்டும்? அவர்கள் எவ்வளவு தண்ணீரில் குளித்திருக்கவேண்டும்?

இப்படி எகப்பட்ட பெண்களை அடுக்கிவைத்துக் கொண்டிருக்கும் நிலையை கவி பின்வருமாறு கூறுகின்றான்:

வண்ணக் குவிமுலையார்
மஞ்சள் நீராரூடி
பண்ணைப் பயிர் வளர்க்கும்
பாண்டி வளநாடன் !

இலக்கியத்தில்

கூளப்ப நாயக்கன் காதல்

—: காரை முத்துப்புலவர் :—

அதுமட்டு மல்லவாம் ! மீன் விழி மாதர்கள் மன்மதக்கூத்து ஆடவும், செல்வத்துக்கு அதிபதியான கடவுள் எனச் சொல்லப்படும் தோழியர் லட்சுமிதேவி சிங்கார நடனம் புரியவும் ஒரே 'ஜாலி'யாக இருக்கும் வாசலாம் அவனுடைய வாசல் !

இப்படியாகப்பட்ட கூளப்ப நாயக்கன், ஒருநாள் வேட்டைக்குப் போனானும். முதலில் போன தென்னமோ சிங்க வேட்டை, புலி வேட்டைக்குத்தான் ! ஆனால் நடந்த தென்னமோ மான்வேட்டை, மயில் வேட்டை! எந்த ராஜாவைப் பாருங்கள் ; அல்லது எந்தப் பாளையக்காரனைப் பாருங்கள் ! வேட்டைக்குப் போறேனென்று காட்டுக்குப் போவார்கள் ! அங்கே திடீரென்று ஒரு அன்னக்கொடியைப் பார்ப்பார்கள். பார்த்த உடனேயே '' ஆகா மடமயிலே ! ஆசை தரும் தேன்மொழியே !'' என்று பாட ஆரம்பித்துவிடுவார்கள். அங்கு அவளும் இவர்களுக்காகவே காத்துக்கொண்டிருந்த மாதிரி, '' ஆ, என் கண்ணாளா !'' என்று கட்டிப் பிடித்து 'கடைசிவரை' போய் விடுவாள்.

ஒருவேளை இந்தப் பெண்களையெல்லாம் எவனாவது 'பாரசூட்' மூலம் காட்டிலே போட்டிருப்பான் போலிருக்கிறது. பின்னே என்னையா ! காட்டுக்குப் போனவனெல்லாம் விட்டுக்கு ஒரு பெண்ணை இழுத்துவந்திருக்கிறானே இதுவரை. இதோ, அதே மாதிரி கூளப்ப நாயக்கனும் வேட்டைக்கு என்று தான் முதலில் புறப்படுகிறான். அவன் வேட்டைக்குப் போகிற அழகை சுப்பிரதீபக்கவி வர்ணிக்கிறான்; எப்படிப் புறப்படுகிறான் ? தனியாகவா ! சே ! தனியாகப் போனால் புலி அடித்துக் கொன்று விடாதா ? அதற்காக ஏராளமான வேட்டைக்காரர்களையும், சேனாதிபதிகளையும் அழைத்துக் கொண்டு போகிறான் !

இப்படியாகஅவனும், வீரர்களும் காட்டிற்குப் போய், காட்டைக் கலைத்து வேட்டையாடுகிறார்கள் ; பன்றி, புலி, கரடி, சிங்கம் இன்னோரன்ன சகல ஜீவராசிகளையும் கொன்று தீர்க்கிறார்கள்.

'' வாலடித்து மேல்பதுங்கி
வாய்பிளக்க வாள்கிழிக்க
வேல்பிடித்து வீரர் குத்த
வீழ்புலிக்கு மேல்துடிக்க,
வலையில் விழு கரடி முயல்
மரையின் மிசை ஞமலிவிழ
அலகின்மிசை பிடரின்மிசை
அடிகள்விழ, உடல்பதற,''

வேட்டையாடுகிறார்கள். பிரமாத வேட்டையாம் காட்டிலே அவர்கள் தொடாத ஜந்துக்களே இல்லையென்கிறான் கவி. இப்படி சேனா வீரர்களுடன் வேட்டையாடிக்கொண்டிருந்த கூளப்ப நாயகன் திடீரென்று ஒரு மானைத் துரத்திக் கொண்டு தனியாக ஓடுகிறான்.

யானையைக்கொன்றான் ; ஆனால் அதைத் துரத்திக் கொண்டு ஓடவில்லை ; புலி, கரடி, முயல், பன்றி அத்தனையையும் அங்கங்கே கொன்றான். ஆனால் மானை மட்டும் துரத்திக் கொண்டு தனியாக ஓடுகிறான்... என் தெரியுமா ? இங்கேதான் கவி அடுத்த 'லவ்' சீனுக்கு அச்சாரம் போடுகிறான்.

மானைத் துரத்திக் கொண்டு ஒருவன் ஓடுகிறான் என்றாலே அங்கே ஏதோ ஒரு மாதைச் சந்திக்கப் போகிறான் என்று முடிவு கட்டிக் கொள்ளலாம். எல்லாப் பயல்களுமே மானைத் துரத்திக் கொண்டு போய்தான் மாதைச் சந்திக்கிறார்கள். ஏனையா ஒருமாட்டைத் துரத்திக் கொண்டு போகக் கூடாது? அதிலே நவின மில்லையாம் !

மேலும் அவளைப் பார்த்தவுடன், "காட்டு மானைத் துரத்திக் கொண்டு வந்தேன். இந்தக் கன்னி மானைக் கண்டேன் !'' என்று பேசலாமல்லவா ; அதற்காக ! இதன் படி மாமூலாக நமது கூளப்ப நாயக்கனும் ஒரு மானைத் துரத்திக் கொண்டு போகிறான். அந்த மானும் வழக்கமாக அங்கு ஒரு சோலைக்குள் புகுந்து மறைந்து விடுகிறது. அவனும்,

சிங்கத்தின் குட்டி சிலையேந்திச்
செல்வது போல்
அங்கொரு பூங்காவில் விடாயா
றத் தனிப்புகுந்தான்

தண்ணீரிலே தோய்ந்து பூந்தாது வாரி வருகிற தென்றல் ஐயனின் முகத்திலே இருக்கிற வேர்வையை அகற்றுகிறது. வண்டுகள் சத்தமிடுகின்றன. அந்த வண்டுகள் மங்கை நல்லாள் தூது விட்ட வண்டுகள்போல் காண்படுகிறதாம். இப்படியாக நிலக்கோட்டைப் பாளையக்காரர், மதனங்க சுந்தரூபர், மகாராயரராய ஸ்ரீ நாகம கூளப்பநாயக்கர், சோலையிலே தனியாக உட்காரந்திருக்கிறார்.

கவி, அவரை அங்கேயே உட்கார வைத்து விட்டு கன்னியைத் தேடிப் போகிறான். ஏனென்றால் இவனை முழுக்க அளவெடுத்து முடிந்து விட்டது. இனி அவளையும் முழுக்க அளவெடுத்து, இரண்டு பேரையும் சேர்க்கலாமல்லவா ! இரண்டு பேரும் சந்திப்பதற்கு முன்னால் 'டைம் லாப்ஸ்' (time labse) ஆக அவளை வர்ணிக்கிறான்.

அவளுக்கு நவரத்ன மாலை என்று பெயர் வைத்திருக்கிறான். அதாவது, அவளுடைய அழகைப் பற்றி முன்னோட்டமாகத் தெரிந்து கொள்வதற்காக அந்தப் பெயரிலேயே சகல சாரத்தையும் வைத்திருக்கிறான். விலை மதிப்பற்ற ஒன்பது ரத்தினங்களைக் கட்டிய மாலையாம் அவள். கிடந்து தொலையட்டும் !

பெண்களை நாலு ஜாதியாகப் பிரிக்கிறார்களல்லவா ! அதாவது பத்மினி, சித்தினி, சங்கினி, அத்தினி ஆகிய நாலு ஜாதிகள். அதிலே இவள் பத்மினி ஜாதியாம் (நண்பர்கள் எந்தப் பக்கமும் தலையைச் செலவிட வேண்டாம்) அவள் எப்படிப்பட்டவள் என்று முழுக்கச் சொல்கிறான் கேளுங்கள் :

சாதியொரு நான்கின் முத
சாதி பதுமினியாம்
மாது நவரத்ன மாலையெனு
பெண் பெருமாள்
மதன கலை வாணி மதன
த...

...நபவர் :- போய்யா ! நல்லதங்கைப் படம் பாத்... ...ான்னு பாதிலே எந்துருச்சு வந்துட்டியே ! போய் க... ...ரையிலே இருந்து பாத்துட்டுவா !

...ரர் :- என்னாலே முடியாதுங்க! என்னை வெட்டி... ...கொன்னாலும்சரி, அந்தத் தலைவலியை என்... ...முடியாதுங்க ! ஒரு ஆளா—தனியா—எவ்... ...க தியேட்டரிலே இருக்கறது.

தன்... வ... வ... குடுமிக்கா... சரி, ... தாங்க... நேரமுங்...

மதன ரதிக் கேணி மதன சுப
கல்யாணி '
காம குரு பீடம் காமக் கொலுக்
கூடம்
காமக் கிரீட மின்பக் காமக் கட
லோடம் ;
மா முனிவர் வேத அங்கம் மா
முனிவர் அந்தரங்கம்
மா முனிவர் ஓது சங்கம் மாமுனி
வர் ப்ராணலிங்கம் !

என்னென்ன வார்த்தைகள் பாருங்கள்! மதன கலை வாணியாம். அதாவது அதற்குமேல் எவருமில்லை. மதனரதிக்கேணியாம்! அட சண்டாளா! கேணியென்கிறான் பாருங்கள்! காமக் குரு பீடமாம்! அதாவது, மன்மத உலகின் வாத்தியார் ஸ்தானத்தை அவளுக்குக் கொடுக்கிறான். காமக் கொலு கூடமாம்! இது என்ன தெரியுமா? எக்ஸிபிஷன்!- கண்காட்சி சாலையென அறிக!

இவள் போன்ற பெண்ணை சிற்பி வடித்து வடித்துப் பார்த்தாலும், முடியவில்லையாம்; கடைசியில் சிருஷ்டி இலாக்கா மந்திரி பிரமன் இவளைச் சிருஷ்டித்தானும்! யாரும் அவளைப் பிடித்துக் கட்டி, வாடி வதங்கி விடாமல், செவிலித்தாய் மடியிலிருக்கும் பூமாலையாம் அவள்! அங்கு, இங்கு, ஆடி அலைந்து அவஸ்தைப்பட்டு விடாமல் அவளைப் பத்திரமாகப் போற்றி வளர்த்தார்களாம்! முதலிலே. சொல்லுகிறான் 'மதனரதிக்கேணி' என்று. பின்னால் சொல்லுகிறான் போற்றி வளர்க்கப்பட்ட புனிதவதி என்று! புனிதவதி ஒருவனுக்குரியவளாக, அப்படி இருப்பதில் தவறில்லை யென்று கருதியிருப்பான் போலிருக்கிறது. போய்த் தொலையட்டும், அவனுக்காக நாம் சமாதானம் சொல்வோம்!

அவள் அன்றன்றைக்கு மணம் வீசி முகங்கருகி வாடி வதங்கிவிடும் மருக்கொழுந்து அல்லவாம்! எந்நாளும் மணம் வீசும் மருக்கொழுந்தாம்! பொங்கிச் சிவந்து கருத்துப் ...முங்காமல்,. தங்க நிறாகச்சமைந்த ...க்கரைப் பாகாம்! மலைக்காட்டுக் ...ள்ளே தூங்காமல் சப்ரமஞ்சத் ...லே தூங்கும் நவரசத்தேனும்! ...க்கு வரி அனுபவித்துச் சொல்கிறான். காட்டுமுள்ளிலே ஆடி அலையாமல், மெத்தையின் மேலேறி விளையாடும் தோகைமயிலாம்! கொம்பு தோறும் போய், தாவிக் கூவித்திரியாமல் அம்பொன்மணி ஊசலில் இருந்து ஆடும் குயில் பேடாம்! குளறிக்குளறி மொழி பேசுகிற கிளியில்லையாம்! மதனகலை சொல்லும் கிளியாம்! அதாவது அரைகுறை ஆங்கிலத்தில் சொன்னால் "செக்சுவாலஜி ஸ்பீக்கிங் பேரட்!"

...தவர் :— (இன்ஸ்பெக்டரிடம்) சார்! எங்க 'குத்தூசி' குருசாமி பேசப் போகிருரு! அதுக்கு லைசன்சு வேணும் சார்!

...ஸ்பெக்டர் :--கொடுக்கிறதில்லே ...தடையில்லை. கூட்டம் நடக்கற ...டத்திலேருந்து நாலு சதுர ...மைலுக்கு, கல்லு, கம்பு எதுவும் இல்லாமே பார்த்துக்கங்க!

பெண்களுக்கு நடை கற்பித்த அன்னங்களுக்கு இவள் நடை கற்பிப்பாளாம். அதாவது, வாத்தியாருக்கு வாத்தியார்! உபயோகிக்க, உபயோகிக்க தேய்ந்து போகாமல், மேலும், மேலும் ஒளி வீசும் முத்தாம். இதற்கு ஒரு உதாரணம் சொன்னால், ஒரு பெண்ணைக் கலியாணம் செய்துகொடுக்கிருர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். நாளாக, நாளாக அவள் கிழவி ஆகிருள்! இவள் நாளாக, நாளாகக் குமரியாகி, கோர்த்து வைத்த உருளைக்கிழங்கு மாதிரி ஆகிவிடுகிருள் என்கிருன் கவி!

ரத்தினங்களை அந்த காலத்தில் செம்புக்குள் போட்டு மூடிவைப்பார்கள். ரத்தினத்தை செம்பு தாங்கும்! ஆனால் இந்த ஒரு ரத்தினம் இரண்டு செம்புகளைத்தாங்கி வருகிருளாம்; (ஓவர்! ஓவர்! டெரிபிள்! டெரிபிள்! என்பீர்கள்! இருக்கிறது சுவாமிகளே, இருக்கிறது காவியத்தில்!)

கடைசியில் . ஒரேடியாகக் கையை உதறிவிட்டுக் கவி அவளைப் பற்றிக் கூறுகிருன்! "சும்மா சொல்றதிலே என்ன இருக்கு! சுருக்கமாச் சொன்ன இத்தான்!" என்று கடைசி இரண்டு வரிகளில் முத்தாய்ப்பு வைக்கிருன்!

அதாவது :—

" கண்ணுக்குட் கண்மணிபோல்
கண்மணிக்குட் பார்வையைப்போற்
பெண்ணுக்குப் பெண்ணசை
கொள்ளவந்த பெண்ணரசு !"

இத்தகைய நவரத்னமாலை வீட்டிலே இருக்கிருள். தோழி குணமாலையைப் பார்த்து, "அடி சகி! இன்று என் இடக்கண் துடிக்கிற தடி!" என்கிருள். என் துடிக்காது! இவளுக்காக ஒரு காதலனைத்தான் கவி சோலையிலே கொண்டுவந்து உட்கார வைத்திருக்கிருனே! இவள் கண் துடிக்கிறது. என்ற உடனே அந்தந் தோழி—பெரிய லைககாரி போலிருக்கிறது.—" அடி கன்னி கழியாத கார்கையே! உனக்கு இன்று அதிக சுபசோபனம் உண்டாகுது!" என்கிருள்!

இந்தத் தோழிகளெல்லாம் பஞ்சாங்கக்கார அய்யர் வீட்டுக் குழந்தைகள் போலிருக்கிறது! எனவே ஜோசியம் பாருங்கள்! இந்தவரிகளில் கவி பின்னாலே தான் காதலனைச் சேர்த்துவைக்கப் போவதை முன்னாலே வெளிச்சம் போட்டுக்காட்டுகிருன்! பிறகு அவளையும் தோழியரையும் பூங்காவிற்கு அனுப்பி வைக்கிருன். நாம் எதிர்பார்த்த தைப்போல்!

பூங்காவிற்கு பூ எடுக்கப் போம் போது அவள் எப்படி அலங்கரித்துக்கொள்கிருளாம்! கேளுங்கள்! கவி தானே போய் அவளை அலங்கரிக்கிருன்.

" பச்சைப் பரிமளங்கள்
பாங்காய்க் கலந்தரைத்த
கொச்சி மஞ்சட் பூசிக் குளித்த
திருமேனியின்மேல்
சாந்து புழுகு சவ்வாதுகதம் பம்
பூசிக்
காந்திதர வெண்சலவைக் கண்
டையிட்ட சேலைகட்டி
காவி வரிநெடுங்கட் காரிகைக்குப்
பாங்கியர்கள்
சீவி வகுப்பெடுத்துச் சேர்த்துக்
குழல்முடித்து,
மையெழுதிப் பொட்டெழுதி
வட்டமிட்ட கொங்கைக்குத்
தொய்யில் எழுதித் துணையடிக்
குப் பஞ்செழுதி
ஆடகப்பொன் மெட்டிட்(டு)
அழகு வெள்ளித்தண்டையிட்டு,
பாடகங்களிட்டுப் பசும்பொற்
சதங்கையிட்டு
முத்தார மேகலைமேல் மூன்றடுக்
குப் பொன்னரைஞாண்
வைத்தாரக்கட்டி மருங்கொட்டி
யாணமிட்டு,
செய்ய கொடிப்பவளஞ் செம்
மணிகள் ஈன்றதுபோல்
கைவிரலுக் கேற்றரத்னக் கல்
மோதிரங்களிட்டார் ;
கட்டிப்பவளம் கனகவளைப் பொற்
கடகம்
தட்டுச்சரியைச் சரியாகக் கைக்
கணிந்து,
பட்டு ரவிக்கையிட்டுப் பட்டையப்
பொற் காறையிட்டு
வட்டமுலை மார்பிலங்க வச்ரச்
சவடியிட்டார் ;
மோகனப்பொன் மாலையிட்டு
முத்துமணி மாலையிட்டுப்
பூகத்தைவச்ரமணிப் பூடணங்
களால் மறைத்தார் ;
வாய்க்குமொரு வட்ட மதியொரு
முத்தீன்றதுபோல்
மூக்குத்தி முத்து முகத்துக்
கிணங்கவிட்டார்;
கொந்தளப் பொன்னோலையிட்டுக்
கொப்பிட்டு வாளியிட்டுச்

சூட் போட்டவர் :— என்னங்க, ஒரு மாசத்துக்கு முன்னலே பாத்தேன், ஆளு இளைச்சுப் போயிருந்தீங்க! இப்ப உடல் செழிப்பும், பணச் செழிப்பும் யிருக்கிருப் போலே இருக்கு!
குடுமிக்காரர் :— ஒண்ணுமில்லிங்க! ஆவடிக் காங்கிரசிலே டிக்கட் வித்தேன்.........

செந்திருவிற் கேற்கத் திருவும்
பிறையுமிட்டுக்
கொண்டை சுருட்டிமுத்துக் குச்
சிட்டுக் குப்பியிட்டுத்
துண்டப் பிறைக்கிணங்கச் சுட்டி
யொன்று கட்டிவிட்டார்;
பூட்டினர் பொற்சிலைக்குப் பொன்
னிடுவார் போலுடைமை,
சூட்டினர் பூமாலை, சுற்றினர்
தோழியர்கள்
ஞாலம்புகழும் நவரத்னமாலை
மின்னுள்
கோலஞ் சிறந்தமலர் கொய்ய
வென்று தான்நடந்தாள்,"

போனவள் என்ன ஆனுள்? என்ன ஆவாள்! அடுத்துப் பார்ப்போம்.

(தொடரும்)

கர்னடக திராவிட முன்னேற்றக் கழக
முதல் மாநாடு

பிப்ரவரி மாதம் 12, 13 தேதிகளில்
பெங்களூர் பிளாக்பள்ளி மைதானத்தில்
மஜீத் பந்தலில், கைலாசம் அரங்கில் நடை பெறும்

சனி, 12—2—55	ஞாயிறு, 13—2—55
சமுதாய சீர்திருத்த மாநாடு	அரசியல் மாநாடு
தலைவர்	தலைவர்
காஞ்சி கல்யாண சுந்தரம்	என். வி. நடராசன்
திறப்பாளர் :	திறப்பாளர் ;
ப. உ. சண்முகம்	தோழியர் அருண்மொழி பி. ஓ. எல்.

அறிஞர் அண்ணாதுரை, எம். ஏ.,

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. க. அன்பழகன், எம். ஏ.
கே. ஏ. மதியழகன் பி. ஏ. சி. பி. சிற்றரசு, ஈ. வே. கி. சம்பத்
அ. பொன்னம்பலனர், கலைஞர் மு. கருணாநிதி,
நடிப்புச் செல்வர் புரட்சி நடிகர்
எஸ். எஸ். ராஜேந்திரன் எம். ஜி. ராமச்சந்திரன்

மற்றும் பல முன்னணி வீரர்கள் கலந்துகொள்வர்.

இசை-முரசு நாகூர் அனிபா குழுவினரின் இசை விருந்து இரு நாட்களும் உண்டு.

கட்டணம் (இரண்டு நாட்களுக்கும்)—வரவேற்பாளர் ரூ.3. பிரதி நிதி ரூ. 2. பார்வையாளர் ரூ. 1. பெண்கள் அணு 8.

வ. கு. தலைவர்கள் : செயலாளர்கள் : பொருளாளர் :
எஸ். ஜே. உசேன் ஏ. டி. பிரான்சிஸ் எம். ஆர். பெருமாள்
எஸ். வி. பதி செ. விழியன்

விளம்பரக் குழு :— கி. சோழன், வெங்கடசாமி.
தொண்டர்படைத் தலைவர் : ஆர். ராகவன். துணை : கண்ணன்

"வா வா!'' என்று அவசரப்பட்டான் இடைதுறையான். நான், 'இன்றைக்கு நம் கற்பு அழிந்தது' என்ற முடிவிலேயே திகைத்து நின்று கொண்டிருந்தேன். அவன் அவசரம் பொறுக்காமல் ஓடிவந்து என் கையைப்பற்றினுன். நான் பறித்துக் கொண்டுபோய் கட்டிலுக் ...ப் பக்கத்தில் 'தொப்'பென்று ...ழுந்தேன். விழுந்தபடியே உள் ...ருந்த பணிப்பெண்ணை 'சட்' ...ன்று கிள்ளினேன். அந்த ...நளிலே அவள் வேகமாக வெளி ...லே வந்து எனக்கு முன்னுல் நின்று கொண்டாள். நான் கட்டிலுக்குள் பதுங்கிக்கொண்டுவிட்டேன்.

அவன் ஓடி வந்து அவளது கையைப் பற்றிக் கொண்டான். குடி வெறியிலே அவளைத் தாறுமாறுக் வர்ணித்தான். அவளும் அதிலே பங்கு கொண்டாள். என்னைப்போல் அவள் பயப்படவில்லை. அளவு கடந்த உற்சாகத்தில் அவனுடன் பேசினுள். சொல்லப் போனுல் அவனைக் காட்டிலும் அவளே முந்திக்கொண்டவள் போலிருந்தாள். எனக்குத் திகிலும் ஆச்சரியமும் கலந்து, கலந்து பிறந்தன!

அவன் அவளிடம், "அடி என் கோமளமே! உன்னை அரிசங்கமன் எப்படியெல்லாம் வர்ணிப்பான்?'' என்று கேட்டான். நான் திகைத்தேன். அவளுக்கு, அதற்குப்பதில் சொல்லத் தெரியாதே என்று விழித்தேன். அதற்குள் அவள், "என் மருக்கொழுந்தே! ராசாத்தி என்றெல்லாம் பேசுவாரு!'' என்று கொச்சை மொழியிலே பதில் சொன்னுள்.

அதற்கு அவன், "சீச்சி! கொஞ்சம் கூட காவிய நயம் தெரியாத பயல், இந்த அரிசங்கமன்! காட்டுத் தனமாக வர்ணித்திருக்கிறுன். உன்னைப் பற்றிக் கவிதை கவிதையாக பொழிந்து தள்ளலாமே!'' என்றுன்.

அவன் "ஹி! ஹி! ஹி!'' என்று சிரித்தாள்! எனக்குப் பயம் அதிகரித்துவிட்டது! அவள் பேச்சிலிருந்து, எங்கே அவன் இது ஒரு நாட்டுப்புறம் என்று தெரிந்து கொள்வானே என்று திணறினேன்.

அவன் கவிதையாகப் பாடினுன். அவள் "ஏஞ்சாமி! ஏஞ்சாமி!'' என்றுள்.

[இப்படிக் கமலினி சொன்னதும் நந்தினியும் மங்கையும் விழுந்து, விழுந்து சிரித்தார்கள், ஓரளவுக்குக் கவலைகளை மறந்து. கமலினியும் அந்தச் சிரிப்பில் பங்கு கொண்டாள். பிறகு மேலும் சொன்னுள்...]

நல்லவேளையாக அவன் அவளைப் புரிந்துகொள்ளவில்லை. சத்தம் கேட்கும்படி முத்தமிட்டான். அவள் அவனேடு மிகமிக உற்சாகமாக இருந்தாள். திடீரென்று "உன் பெயர் என்ன சொன்னுய்? மறந்து விட்டேனே!'' என்று கேட்டான் அவன்.

இந்தப் புரியாதவள், 'கருப்பாயி!'' என்று சொல்லி விட்டு, 'ஹி! ஹி!' என்று சிரித்தாள். எனக்கு உயிரே நின்று விடும்போலிருந்தது. அவன் என்ன நினைவில் இருக்கிருனே என்று புரியாமலிருந்தேன்.

"விளையாடுகிருய், வேடிக்கைக் காரி நீ!'' என்று சொல்லி மேலும் முத்தமிட்டான் அவன். எனக்குப் போன உயிர் திரும்பி வந்தது.

"உண்மையைச் சொல்! உன் பெயரென்ன?'' என்று மீண்டும் கேட்டான். இனிப் பேசாமலிருந்தால் குட்டு வெளிப்பட்டுவிடுமெனப் பயந்து, கட்டிலுக்குமேல் மெதுவாகத் தலையைத் தூக்கி, "கமலினி''! என்றேன்! அந்தக் குடிவெறியில் அவன் இது வேறு குரல் என்பதை அறியவில்லை.

"கயமனியா? அதென்ன பெயர்?'' என்றுன. இப்போது நான் செததே போய்விட்டேன. இன்னெரு தடவையல்லவா எழுந்து பதில் சொல்ல வேண்டும்!

அதற்குள் அந்தப் பணிப்பெண், "இல்லே! கஞ்சினி!'' என்றுள் புரியாமல். ஐயோ, இந்த விவாதம் இன்னும் எவ்வளவு நேரம் நடக்குமோ என்று நான் திகைத்துக் கொண்டிருந்தேன். உடனே அவன், "சரி! அது போகட்டும்! இன்றைக்கு ராத்திரி பூரா நாம் தூங்கவே கூடாது!'' என்றுன்.

"ராத்திரி என்ன! நாளைக்குக் கூடத் தூங்கவே வேண்டாம்!'' என்று அவள் பதில் சொன்னுள். அவன் சிரித்தான்! அந்தச் சிரிப்புச் சத்தம்தான் எனக்குக் கடைசியாகக் கேட்டது. பிறகு அவர்கள் பேசவில்லை.

[என்று கமலினி சொன்னதும், மங்கை உதட்டைக் கடித்தபடி 'படக்'கென்று நந்தினியின் தலையில் தட்டிச் சிரித்தாள். நந்தினியும் சிரித்தபடி "ஏன், காதலர் நினைவு வந்து விட்டதோ?'' என்றுள். "எனக்கா, உனக்கா?'' என்று மங்கை, கழுத்தை ஒரு வெட்டு வெட்டினுள். பொதுவாக இரண்டு பேருக்கும் என்கிற மாதிரி இரண்டு தலைகளும் குனிந்தன. கமலினி மேலும் சொல்ல ஆரம்பித்தாள்].

கட்டிலுக்குக் கீழேயே நான் தூக்கமின்றிப் புரண்டு கொண்டிருந்தேன். பொழுது விடிந்தது. அப்போதுதான் அவர்கள் இருவரும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

திறந்திருந்த ஒரு சன்னல் வழியாக வெளிச்சம் வர ஆரம்பித்தது. அப்போது, பழைய படியும் பயம் என்னைச் சூழ்ந்து கொண்டது. மெதுவாக எழுந்தேன். அவன் விழித்துக் கொண்டால் உண்மை வெளியாகிவிடும். பணிப்பெண் கொலைசெய்யப் படுவாள். என் கற்பு பலாத்காரமாகச் சூறையாடப் படும் என்று நினைவு ஓடியது.

வலக்கரத்தால் அவளை அணைத்தபடி அவன் படுத்திருந்தான். வேறு வழியின்றி மெதுவாக அவளைத் தட்டி எழுப்பினேன். நல்ல தூக்கத்தில் அவள் பதறி எழுந்தாள். நான் சட்டென்று அவள் வாயைப் பொத்தினேன. அவள் ஓரளவு தெளிந்ததும், நான் சாடை காட்டியது போல அவன் கையை எடுத்து மெதுவாகக் கீழே வைத்து விட்டு, கீழே இறங்கினுள்.

நான மெதுவாகப் பத்க்கதில் உட்கார்ந்தேன். லேசாகக் கலைந்திருந்த தலையை, முழுக்கக் கலைத்து விட்டுக கொண்டேன். படுக்கையிலே முத்துக்கள் சிதறிக் கிடந்தன. கன்னங்களை என் நகங்களாலே கீறிக் கொண்டேன். என் கழுத்திலிருந்த முத்து மாலையை மெதுவாகக் கழற்றி, கட்டிலுக்குக் கீ... போட்டேன்.

மெதுவாக அவனைச் சத்த மி... அழைத்தேன். அவன் எழாமல்... என் முந்தானையைப் பிடித்து இழு... தான். நான் ஒரு முறை தலையணை... யில் விழுந்து, 'உஸ்' என்று சத்... மிட்டு எழுந்தேன்.

அவன் இப்போது தூக்க... கலைந்து எழுந்து விட்டான். "இ... பொழுது என்ன திடீர் வெட்கம்...'' என்று கேட்டான்! "பொழு... விடிந்ததற்குப் பிறகு கூடவா... சும்மாயிருங்கள்!'' என்றேன்.

"பொழுது விடிந்தால் என்ன... வா, இந்தப் பக்கம்'' என்றுன... நான் பத்தாவது முறையாகச் செ... துப் பிழைத்தேன். உடனே சம... ளித்துப் பொய்க் கோபத்தோடு... "இப்போது என்னைத் தொல்லை... படுத்தினுல், சேலைத்தலைப்பாலே... சுருக்கிட்டுக் கொண்டு செத்து... போவேன்''! என்றேன்.

"வேண்டாம்! வேண்டாம்... பொழுது போகட்டும்!'' என்றுன்... விடிந்தபொழுது எப்போது போகும்... என்று எதிர் பார்ப்பவன் போல்... காணப்பட்டான்.

"பாருங்கள்! உங்களால் என்... முத்துமாலையே அறுந்து விட்டது!'' என்றேன்.

"போகட்டுமே! ரத்ன மாலை... வாங்கித் தருகிறேன்!'' என்றுன். "இப்படியா கன்னத்தையெல்லாம் கிள்ளுவது?'' என்றேன். "ஆ... அப்படியா! எங்கே பார்ப்போம்!'' என்று என் கிட்ட வந்தான். "போதும் போங்கள்!'' என்று... திரும்பினேன். அவன் போதை... தணியாதவனுக திரும்பி சிரித்து... கதவைத் திறந்து வெளியேறினுன்.

நான் பதினேராவது முறையாக... பிழைத்தேன். கதவைத் தாளிட்டு... விட்டு, திரும்பிவந்து, கட்டிலுக்கு... கீழே படுத்திருந்த பணிப் பெண்... ணைத் தட்டித் தட்டி எழுப்பினேன். அவள் தன்னை மறந்து தூங்கி... கொண்டிருந்தாள்.

நான் எழுப்பியதும் தளர்ந்த... நிலையில் எழுந்தாள். ஆகா! ஆகா!... என்று வாய் விட்டுக் கூறினுள். "சீச்சி, போதும் போ.! என்றேன். அவள் என்னவோ போகாத ...

கத்திற்குப் போய் வந்தவள் போல, என்னை அலட்சியமாகப் பார்த்து விட்டு வெளியேறினாள்.

அவள் வெளியேறிய சிறிது நேரத்திற்கெல்லாம், என் அறைக்கு வெளியே சத்தம் கேட்டது. நான் திடுக்கிட்டு, என்ன வென்று ஓடிப் போய்ப் பார்த்தேன்! அந்தப்புரப் பெண்கள் அனைவரும் அந்தப் பணிப் பெண்ணை திட்டிக் கொண்டிருந்தார்கள். விஷயம் தெரிந்து விட்டதோ என்ற அச்சத்தில், பனிரெண்டாவதுமுறையாகஎனக்கு உயிர் போயிற்று.

ஒன்றும் அறியாதவள் போல், அருகில் சென்று 'என்ன, என்ன!' என்று கேட்டேன், "பார்! இவள் அந்தப்புரச் சேலையையும், நகைகளையும் அணிந்து கொண்டிருக்கிறாள். திருடி!" என்றார்கள்.

நான் பெருமூச்சு விட்டு, அதிகாரத்தோடு பணிப் பெண்ணிடம், "எடுத்து வைக்கச் சொன்னால், எண்டி திருடினாய்? இங்கே வா!" என்றவளை என் அறைக்கு இழுத்து வந்து, அவளுடைய உடைகளையே கொடுத்து, அணிந்து கொள்ளச் சொல்லி, அனுப்பினேன்.

உடனேயே அந்தப்பெண்ணை, பட்டத்து ராணி வேலையிலிருந்து நீக்கிவிட்டாள். ஐயோ, அவள் போய் விட்டாளே, இன்று என்ன நடக்குமோ என்று பயந்தபடியே இருந்தேன்.

டாக்டர்: ஓய்! உம்ம மூளை கெட்டு மக்கிப்போச்சு! இனி எதுக்கும் பயன்படாது! உத்தியோகம், கித்தியோகம் பாக்காமெ வீட்டிலே போய் உட்கார்ந்திரும்.

நோயாளி: ஐயோ! ஒரு உத்தியோகமும் பார்க்கக் கூடாதுங்களா?

டாக்டர்: கூடாதையா! வேண்டுமானால் நிதிமந்திரி வேலை பாரும்! அதைத்தவிர மூளையை செலவழிக்கும் வேலையே கூடாது!

இந்த நிலைமையில், நடுப்பகலில் என் அறைக்கு வந்தான் இடைதுறையான். வந்து உட்கார்ந்து கொண்டு, "பொழுது போக மாட்டேனென்கிறதே! போக மாட்டேனென்கிறதே!" என்று பல்லைக் காட்டினான். பட்டப்பகலில் என் கற்பு பலியாகி விடுமோ என்று நான் பயப்பட வேண்டிய கட்டம் வந்தது. இந்த நேரத்தில் ஒரு தூதுவன் ஓடிவந்து, அவனிடம் ஒரு ஏட்டைக் கொடுத்தான்.

அதைப் படித்துப் பார்த்த இடைதுறையான், மெல்ல என்னிடம், "அரிசங்கமன் வந்திருக்கிறானும். நீ அவன் கண்ணில் பட்டு விடாதே! அறைக்குள்ளேயே இரு. நான் இப்போது போய் அவனைப் பார்த்து இளமரக்காவில் இருக்கச் சொல்லி விட்டு வருவேன். மாலையில் போய், நள்ளிரவில் தான் திரும்புவேன். நீ வெளியில் தலை காட்டாதே!" என்று கூறி விட்டு வெளிக் கிளம்பினான்.

மாலைப் பொழுது வந்தது. நான் அந்தப்புரத்தை விட்டு வெளியேறி தோட்டத்திற்குப் போகிறவள் மாதிரி போனேன். அரிசங்கமனுக்கும் இவனுக்கும்உள்ள பேச்சுவார்த்தை என்ன என்று அறியும் முடிவில் புறப்பட்டேன்.

தோட்டத்திலிருந்து முக்காடு போட்டுக் கொண்டு 'விடு, விடு' என்று நடந்தேன். ஆனால், இளமரக்கா எங்கிருக்கிறதென்று எனக்குத் தெரியாது, கால்போனபடியே நடந்து போய்க் கொண்டிருந்தேன்.

ஐயோ! அன்றைக்கு நான் பலியாவேன் என்று நிச்சயமாக நான் எண்ணவேயில்லை.

(தொடரும்)

பொதுக் குழுக் கூட்டம்

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டம் பிப்ரவரி 19-20ம் தேதி (சனி ஞாயிறு) களில் கோவை மாவட்டம் பேரூரில் நடை பெறும், ஆராயப் படும் பொருள், கூட்டம் நடைபெறும் இடம் பின்னர் அறிவிக்கப்படும்.

திருமணம்

வண்ணையம்பதி; மறைந்த கொள்கை வீரர் கே. எஸ். பாண்டியன் அவர்களின் மகள் பி. இராஜேஸ்வரிக்கும் வட சென்னை தோழர் எம். துரைசாமிக்கும் 11-2-55 காலை 9மணியளவில் 36, மணிகண்ட முதலி தெருவில் திருமணம் நடைபெறும்.

நாவலர் நெடுஞ்செழியன், நடிப்புப்புலவர் இராமசாமி, புரட்சி நடிகர் இராமச்சந்திரன், நடிப்புச்செல்வர் இராசேந்திரன், நடிகமணி டி.வி. நாராயணசாமி ஆகியோர்மணமக்களை வாழ்த்திப் பேசுவர்.

நா. கே., நீ. சொ.

சரியான விடை அனுப்பியோர்

1. ந. இராமலிங்கம், பல்லாவரம் 2. இரா. கோதண்டராமன், சென்னை 3. என்கோ, சென்னை-23. 4. அ. சொக்கலிங்கம், சுந்தரசோழவரம் 5. எம். எஸ். ராஜரத்தினம், தேனி 6. ஜெ, சங்கரராவ், திருமயிலை 7. இராச, இராசசேகரன் சென்னை-14 8. கோபால், கோட்டூர் 9. எஸ். பி. பிரெடரிக்ஸ், சென்னை-13. 10. திரு. வா.திருமலை, சென்னை-15. 11. நா. சு. நவீன்சந்தர், சோழவந்தான். 12. அ. ஜெயமணி. அனகாபுத்தூர் 13. அ. அலெக்சாண்டர், பொன்மலை 14. குஞ்சு, வல்லிபுரம் 15. வி. எஸ். முத்துகிருஷ்ணன், திருவாரூர் 16. பி. சி. இராதாகிருட்டிணன், சந்தை புதுப்பாளையம் 17.ந.ச. இளங்கோவன், நம்பியழகன் பாளையம் 18. டி. இராமசாமி, ஆத்திபட்டி 19. சு. அமிர்தலிங்கன், மா. நரசிம்மன், இளம்பிள்ளை 20. ந தருமலிங்கம், முத்துப்பேட்டை 21. கு. இராமசாமி, பள்ளியகரம் 22. ம. அன்புத்தம்பி, தஞ்சை 23. ப. கிருஷ்ணமூர்த்தி, சென்னை-6. 24. கூ. ஜ. கிருஷ்ணன், நாகைப்பட்டினம், 25. அ. இராமசாமி, த. ப. பாளையம், 26. சொ. சீனிவாசன், காட்டுப்புத்தூர், 27. கு. இராமதாசன், சென்னை-11. 28. இரா. மு. சௌந்தரராசன், சென்னை-11 29. உ. கு. முனிரத்தினம், அயன்புரம் 30. மு. அ. வேலு, அப்புத்தளை 31. செ. சற்குருநாதன், வதுளை 32. என். ஜே. கோபாலகிருட்டினன், அரியலூர் 33. ஜெ. கஸ்தூரிபாய், சென்னை-1. 34. ஞ. தே. சாரங்கபாணி, பழவேற்காடு 35. எம். முஜருதீன், சென்னை-2. 36. பி. கு. செல்வன், சென்னை-11 37. க. மல்லிகார்ச்சுனன், சென்னை-3. 38. மு. செங்குட்டுவன், பொன்னேரி 39. கு. கோவிந்தராசன், சென்னை-5. 40. த. கி. பலராமன். திண்டிவனம் 41. ஏ. டி. சம்பந்தன், சிதம்பரம் 42. எஸ். எஸ். ஆகன் குன்னூர் 43. ந. கஜேந்திரன், சென்னை-12. 44. இரா. சிவஞானம் சென்னை-10 45. ஏ. கனகசபை, புதுப்பாளையம் 46. கோ. கதிர்வேல், சென்னை-5. 47. மு. இராதாகிருஷ்ணன், சென்னை-7, 48, சாகிஜமால், சாலைநகர். 49. அ. சந்திரசேகரன், த. ப. பாளையம், 50. ச. இராமசாமி, திருநெல்லிக்காவல், 51. அண்ணு பழநியப்பன், ஆ, தெற்கூர். 52. நா. அப்பாதுரை, மணப்பாறை, 53. ச. இராமையன், திருப்பாப்புலியூர். 54 எஸ். எம். கமலேசன், குடியாத்தம். 55. ப. இராமநாதன், சென்னை 1. 56 க. சரோஜினிதேவி, பெரியகுளம். 57 இ. பிலோமினு, ஊர்கம். 58- எஸ். எத்திராசன், வேலூர் 59 பெ. சன்னுசி. மேலச் சிந்தனைச்சேரி. 60. ந, ஆ: இராமனுதன், குடியேற்றம். 61. சு. பார்த்தசாரதி, குடியேற்றம். 62. கே. என் காவேரி முதலியார், வானியம்பாடி. 63. வே. கி. ரங்கபாஷ்யம், வேலூர். 64. உ. இராமசந்திரன், கம்பம். 65. சையத்ஜமீல், தர்மபுரம். 66. எஸ். சுப்பிரமணியம், அருப்புக் கோட்டை. 67. சாமி. சௌந்தர், தூத்துக்குடி. 68. ரா. தட்சிணமூர்த்தி, வாணியம்பாடி. 69. சு. பொன்னம்மாள், சென்னை 1. 70. கே. எஸ். ஆர். மணிராஜன், மதுரை. 71. கே. வி. ராமானுஜம், ஆத்தூர். 72. மா. முத்துலட்சுமி காளிசெட்டிபட்டி. 73. கு. பா. வேணுகோபால், இளம்பிள்ளை, 74. அவயாம்பாள் தஞ்சை. 75. ஏ. கோவிந்தன், நாட்டார் மங்கலம் 76. இரா. சனர்த்தனம், மதுரை. 77. கி. சிவகுருநாதன், கோவை 78. தமிழன்பன், சென்னை 4. 79. நீ. தங்கவேலன், வேலூர். 80. தி. சம்பந்தம், வடவழி 81. மது. சு. ஜெகதீசன், மதுரை. 82. சி. தி. இராசன், பழனி. 83. தி. ரா. செல்வராசன், சென்னை 21. 84. மா. மாரிமுத்து, சிறுதையூர். 85. சி. கோ. காஞ்சிமணி, சென்னை 11. 86. பொதுமோகன சுந்தரன், பிரம்பை. 87. கி. பா. சு. மணி, வாலாஜாபாத். 88. சிவன், ஆய்க்குடி. 89. தி. நா. நாதமுனி, திருப்பத்தூர். 90. க. இரத்தினசாமி, தாராபுரம். 91. நா. வசரவேல், உடுமலைப்பேட்டை. 92. எம். பொன்னிநளன், பாலையம்பட்டி- 93. ம. சரோஜா சென்னை 12. 94. எ. என். இராமச்சந்திரன், சென்னை 2. 95. மு. நேசபக்தன், பல்லாவரம். 96. போ. பாலகோபால், திருவண்ணாமலை. 97. வள்ளிமணாளன், வள்ளியூர். 98. கு. இராமாதேவி, சென்னை 1. 99. மு. இராமசாமி, காரைக்குடி. 100. ரவீந்திரன், திருச்சி.

தொடரும்

நா. கே. நீ. சொ.

கேள்வி 2.

கி. பி. 1077-ல் சீனப்பேரரசனுக்கு அரசியல் தூதனை (Ambassador) அனுப்பிய தமிழ்நாட்டு மன்னன் யார்? பாண்டியனா? சோழனா? பெயரென்ன?

முகவரி:

நா. கே., நீ. சொ.

'தென்றல்'

2-127, மௌண்ட்ரோடு, சென்னை-6.

★ மாங்கனி ★

கண்ணதாசன்

திருச்சி சிறையிலே இருக்கும்போது, தோழர்கள் அன்பில் தர்மலிங்கம், 'கலைமகள்' இராதாகிருஷ்ணன் முதலியோர் ஒரு காவியம் எழுதும்படி என்னைத் தூண்டினார்கள். அவர்கள் கொடுத்த உற்சாகமும் அடிக்கடி போட்டுத் தந்த 'காப்பி'யும் இந்த '**மாங்கனி**' காவியத்தை நான் எழுதிமுடிக்க எனக்குப் பேருதவி புரிந்தன.

காவியம் இப்போது சுமார் 200 பக்கங்களில் **பாரி நிலையத்தாரால்** அச்சிடப்படுகிறது. அதிலிருந்து சில பகுதிகளை இங்கே எடுத்து வெளியிட்டுள்ளேன்.

நள்ளிரவில்-மாங்கனி வீட்டில்...

வெள்ளை உடை, வெள்ளை உடல், வெள்ளை உள்ளம்
விண்பிலிற்றும் மழைமுத்தில் ஒளிச்சிரிப்பு!
விள்ளரிய கிள்ளைமொழி, பிள்ளைப் போக்கு
மேற்றிசையிற் கதிர்படிந்த சிவப்பு நாக்கு!
அள்ளுமனக் குயில்மேனிக் கரிய கூந்தல்
அசையுங்கால் எவ்வுயிரும் அசைந்து காட்டும்!
எள்ளளவும் குறையில்லா அழகுத் தேவி
"என்ன சுகம்?" எனும் கீதம் இசைத்திருந்தாள்!

படிக்கத்தை ஓர்புறமும் வெற்றிலைசேர்
பைக்கட்டை மறுபுறமும் வைத்தா ளாகிக்
கடற்பஞ்சு மயிர்க்கத்தை ககனம் பார்க்க
காலத்தின் பழம்பாதை அச்சுத்தோன்ற
நடுக்கத்தில் ஓயாத நடனங் காண
நாளைக்கோ மறுநாளோ எனும்ப டிக்குத்
துடிப்பெட்டைப் பெண்ணாளின் அன்னை யான
தொல்கிழவி கீதத்தைக் கேட்டி ருந்தாள்!

நாப்பாடக் கைபாட நயனம் பாட
நலம்பாடி முடித்திட்டாள் நடுவேற் கண்ணி!
மூப்பாட, முடியாட, முன்கை யாட
முதிர்மாதா பின்காணும் பேச்சு ரைப்பாள்;
"பாப்பாடும் கண்ணே! என் பளிங்குக்கோடே!
பழநாவில் நான்வாழ்ந்த வழியில் நீயும்
பார்ப்பார்க்கும் கேட்ப்பார்க்கும் ராப்பெண் டாகப்
பணியேன்நான்! மணமுடித்துப் பார்க்க எண்ணம்

தாசிகுலம் என்றாலும் தகைமை மிக்க
தமிழர்குலம் தான்! என்ற போதிலும், கேள்
மாசுறுநம் குலத்தினிலே பெண்ணெடுக்க
மனத்துணியார் பிறர்! அதனால் பாடஞ் சொல்லும்
ஆசிரியர் நம் குலத்தார்; அவர்பி ளைக்கு
அழகிஉனை மணமுடிக்க நினைக்கின் றேன்யான்.
பாசிபடி நீரேனும் குளத்தின் சொந்தம்
பனித்துளியின் கூட்டென்று கருது மன்றோ?

பொற்கிளியே! சொல்!" என்றாள்; உடனே அந்தப்
பூக்காட்டின் வாய்ப்பூட்டைத் தேன்தி றக்கும்!
"கற்கிலையோ அம்மாநான்! கயவன் அந்தக்
காமுகனுக் கென்நெஞ்சைத் தத்தம் செய்ய?
பொற்கிளியை வானரத்தின் மடியிற் போடப்
பொருந்தியதோ உன் உள்ளம்! போதும்! போதும்!
விற்பிடித்த வீரர்எனை மணவா ரென்றால்
வியன்கலைக்கே மணம்போகி வாழ்ந்தி ருப்பேன்!

தென்னாடு சேரனகம் மட்டு மல்ல!
திருப்பாண்டி நாடுண்டு மதுரை என்று!
பொன்னாடு சோழன்மனை உறையூ ருண்டு!
பொருந்துமெழில் ஆடவர்கள் பலபே ருண்டு!
இந்நாடு எத்திலுமே என்னை ஏற்கும்
இன்குணத்தார் இல்லைஎனில் மணமே வேண்டாம்;
மண்ணான தாசிகுலம் பிறப்பா லன்றி
படிதொடர்ந்து வரும்என்றும் நினைக்கலாமோ?"

"சொல்கின்றாய் நீமகளே! ஆனால் இந்தத்
தொல்புவியில் பரம்பரைக்கும் களங்கம் உண்டு.
மெல்கின்றாய் வெறும்வாயை! நற்கு லத்தார்
விரும்பிஉனை ஏற்பாரென் றெண்ணி டாதே!"
கொல்கின்ற சொற்சொல்லி முடித்தாள் அன்னை
குமுறியெழும் துக்கத்தை வடித்தாள் கன்னி!
வெல்கின்ற நடங்காட்டும் இடவளைக்கை
வீணையின்மேற் பட்டு இசை சோகம் மீட்டும்!

அணையாத பெருந்தீயை மூட்டி விட்டு
அன்னையார் மறுபுறத்தில் சென்றுவிட்டார்!
கணைபாய்ந்த நெஞ்சத்தைக் கைகள் ஆற்றக்
கார்கூந்தல் தலையணையாய்க் கன்னி கொண்டு
தணியாத குழப்பத்தில், ஊற்றெ டுத்த
தண்ணீராய்க் கண்ணீரை விழியாற் கொட்டி
'இனியேது! போர்க்களத்தில் பூத்த பூதான்!"
என்றெண்ணித் துயராற விம்மிச் சோர்ந்தாள்.

வான்திறந்து வந்தன்ன வலக்கை ஒன்று
மங்கைமுகக் கண்ணாடி தேக்கும் முத்தை
தேனெடுக்கும் சுரும்பினைப்போல் எடுக்கும்; உள்ளம்
தெளிவிக்க வந்தேனென் றதுவே சொல்லும்!
கூன்கிழ்வித் தாயென்று, கரம்ப டுக்கம்
கொண்டதனால் பெண்பேதை எண்ணிக் கொண்டு
மான்கொடுத்த விழிக்கூட்டை இறுக மூடி
"மனந்தேற்ற வேண்டாம்போ!" என்றாள்! ஆனால்

"மாங்கனி" என்றாண் வாயின் வார்த்தை கேட்டு
மனந்துடித்து நடுக்குற்று எழுந்தாள்! தெற்குப்
பாங்கினையே உருக்கிவிட்ட பாடல் யாவும்
படையெடுத்து நிற்கின்ற இளமை கண்டாள்!
ஆங்குவர முடியாத இடத்துச் சேய்தான்!
ஆனாலும் அவள் உள்ளம் கொதித்துச் சொல்லும்
"தீங்குநினை வுற்றீரோ அமைச்சர் பிள்ளை!
தேவடியாள் குலந்தான்நான்! குணத்தி லல்ல!

திறந்திருந்த வீட்டிற்குள் ஓசை யின்றித்
திருடனைப்போல் வந்தீரே! தென்னர் தானா?
மறந்திருந்தால் எதுவரையில் துணிய மாட்டீர்!
மானத்தை இக்கோதை மறவாள்! போம், போம்!
பிரிந்திருந்த காதலிபால் வந்தாற் போலப்
பெண் முகத்தில் கைசேர்க்கும் துணிபு நன்று!
அறந்திரிந்து மறம்பிறக்க சேரநாட்டில்
அமைச்சர்மகன் காரணமாய் இருக்க வேண்டாம்!

முதற்குற்றம்! என்வரையில்! மன்னித்தேன்! போம்
மூதாட்டி என் அன்னை வருமுன்னே போம்!"
பதைப்புற்று இவ்வார்த்தை பாவை சொன்னாள்
பனிச்சொட்டாய் இரண்டுதுளிக் கண்ணீர் சிந்தி!
'வதைப்புற்ற நெஞ்சத்தின் வார்த்தை யாவும்
மறைந்திருந்து கேட்டேன்நான்! அதனாலேமன்
பதைக்குள்ளே நல்லவரும் உண்டு என்னும்
பதங்கூற வந்தேன்! பொய் எனநினைந்தால்

மன்னிக்க! இடம், காலம் தவறே! ஆனால்
மனமாசு அணுவேனும் இலவே இல்லை!
பொன்னிக்கா மாங்கனியே! அரசின் முன்னே
பொட்டிட்டு நீபறந்த காட்சி கண்டு
உன்னைத்தான்...உன்னைத்தான் மணமு டிக்க
உறுதிகொண்டு விட்டேன்நான்! சிறிது கூட
என்னைத்தான் நீயறிய வில்லை; ஆனால்
என்றேனும் நல்லுள்ளம் அறிவா"யென்றான்!

வெள்ளிக்கா சொருபிடியைக் கீழே கொட்டி
விட்டதுபோல் அலட்சியமாய்ச் சிரித்து, "ஐயா!
நள்ளிரவு! தாசிமனை! இளம்பெண் தூங்கும்
நறுமலர்ப் பஞ்சணையருகோர் காளை வந்து
மெள்ளமுகந் தொடுவதுதான் உங்கள் ஏட்டில்
வீரர்கள்பெண் கேட்கவரும் செய்தி யாமோ?
கள்ளமனம் எம்குலத்தில் பழைய சொத்து!
காளையதைக் கொண்டுவரல் நன்றே யல்ல!"

என்றவள்தம் உரைகேட்டு நிலைக லங்கி
இப்போது தெளிவுசொலல் முடியாதென்று
கன்றுமனம் தத்தளிக்க, இட்ட கண்ணை
கழற்றாமல் குருடாகி நடைபிறழ்ந்து
"நன்று" என ஒருவார்த்தை மெல்லப் போட்டு
நடந்தான்நல் அடலேறு தெருவை நோக்கி!
இன்றுநாம் சென்றவழி சரியே யல்ல!
என்பதுபோல் அவன்நெஞ்சு இடித்துக் காட்டும்!

தாளாத காதலினுல் தடங்கண் ணேனைத்
தன் சொந்த மனையாக்கி மணமு டித்து
மீளாத இன்பத்தில் வீழ்ந்திருக்க
விரும்பித்தான் அஃலேறு அங்கு வந்தான்!
கேளாத நல்வார்த்தை புதிதாய்க் கேட்டால்
கேள்வியில்சந் தேகம்வரல் இயற்கை யன்ருே?
நீளாத கை அங்கு நீண்டதாலே
நெடுநேரம் நில்லாதென் றவ்விநி னேந்தாள்.

சேரன் அவையில்.

மாற்றலர் அஞ்சிச் சோர
மணிக்கொடி துஞ்சும் மார்பன்!
கூற்றுவன் பகைவர்க் காகிக்
குணக்கடல் தென்னர்க் காகும்
ஆற்றலன்! சேரன்! பக்கம்
அமைச்சரார் அழும்பில் வேளும்
வேற்றுமை அறியாக் கோதை
வில்லவன் தானும் நின்ருர்!

இளங்கவி றங்கே வந்தான்
இட்டமைத் தழும்பில் சொல்வான்
"மனங்குளி ரடலே றின்று
மாபெரும் பொறுப்புன் பாலே!
களந்தனில் மோகூர் வேந்தன்
கால் சிரந் தன்னில் மோதப்
புறந்தரும் காட்சி காணப்
போகின்ருய்! வெற்றி காண்க!

பழையனின் காவற் சின்னம்
பாம்பிரு கண்கள் போலும்
குழைமலர் 'வேம்'பென் றுன் பால்
கூறவோ வேண்டும்! அஃதை
இழைபட வெட்டி வீழ்த்தி
இரதமொன் றதிலே செய்து
மழையென முரசு கொட்டி
வருகவென் றிம்மச் செல்வ!"

என்னவும் தலையைத் தூக்கி
ஏறுபார்த் திட்ட பார்வை
துன்னலர் எதிரே நின்ருல்
தூசிபோற் பறப்பர் என்னும்!
"கன்னலே! மற்றும் ஒன்று;
களைப்புறும் வீரர் தங்கள்
இன்னலைத் தீர்க்கப் பாட
இரண்டொரு கணிகை கொள்க!"

என்றதும் அடலே றுள்ளம்
என்னவோ செய்யும்! அங்கே
நின்றவன் கங்கன் சொன்ஞன்
"நிகரறு மன்ன! தெற்குக்
கொன்றையூர்த் தங்கம், வைரம்
கோதையர் இருவர் தம்மை
இன்று நான் ஏற்பா டாக
இட்டுவந் துள்ளேன்," என்று!

"பாவி நீ! பாழாய்ப் போக!
பழையன் போற் பகையே நீயும்!
ஆவிதான் வருவா ளென்று
ஆர்ப்பரித் திட்ட நெஞ்சில்
சாவையே அழைத்த தாகச்
சாற்றினய்! பார்க்கின் றேன்வா!"
மார்விலே வடுப்போற் கண்ணன்
மனத்துறும் கருத்திவ் வாறு!

சேரமான் அருகே வந்து
தீரனின் தோளிற் தட்டி
"வீரனே! வென்றி கொள்க
வென்றிநம் வீட்டுச் சொத்து;
தீரனே பழையன்! ஆனல்
திருடர்தம் தீரம் போலும்!
சேரனே! தென்னன் பிள்ளாய்!
சென்றுவா! குறைவில் லாது!"

விடை கொடுத்தேக, வீரன்
வீறுகொண் டேகி, வாசற்
கடையிலே வந்து நின்று
கங்கனை அழைத்துப் "பேதாய்!
நடையிலே வாத்துப் போலும்
நயக்குரல் காகம் போலும்
உடையினைத் தவிர வேறு
உருப்படி இல்லாப் பெண்ணை

இடர்தவித் தின்பங் கொள்ளும்
இசைக்கென அழைத்துச் சென்ருல்
தொடர்வது தலைக்கனந் தான்!
தொல்லைகள் நீங்கா தப்பா!
படர் முகம் பார்த்தாற் போதும்
பசியமாங் கனியென் பாளை!
உடனவள் மனைக்குச் சென்று
உத்தரவிடு! போ!" என்ருன்.

"கொன்றையூர்த் தங்கம், வைரம் –
குயிலுங்க!" என்ருன் வீரன்!
"நன்று தான்! கவிஞ ரெல்லாம்
நல்லிசை குயிலைப் போலும்
என்றுதான் சொன்ன ரல்லால்
எவரந்த இசையைக் கேட்டார்?
இன்று நான் கேட்டேன்! ஐயோ!
எனக்கதில் சகிப்பே இல்லை!

சொன்னதைச் செய்முன் னலே
துவளுடல் இளம் பெண் ணேக்
கன்னலை, மணியை, அந்திக்
கருக்கலில் மணக்கும் பூவை
இன்னையே சொல்லிவா!" வென்(று)
இயம்பினன் கங்கன் தானும்
என்னமோ ஏதோ கொஞ்சம்
இருக்கு'மென் றெண்ணிப் போனன்!

[அடுத்த இதழில் இருபகுதிகளோடு இது முடியும்.]

திராவிடர் வாழ்ந்த நிலை, ஆரியம் புகுந்த வழி, செய்தவினை, காங்கிரசில் பெரியார், பார்ப்பன மயம்கண்டு பதைத்தல், காங்கிரசை விட்டு வெளியேறல், நீதிக்கட்சி, தென் இந்திய நல உரிமைச் சங்கம், திராவிடர் கழகமாக மாறுதல், இந்தி எதிர்ப்புப் போர் மற்றும் 1942 வரை திராவிட இயக்கத்தின் வரலாறு, தென்னிய காவியமாக வெளிவருகிறது!

கண்ணதாசன் எழுதிய

'பெரும்பயணம்'

(காவியம்)

முதற்பாகம்

[தென்றலில் வெளிவந்ததைக் காட்டிலும் அதிகம் எழுதப்பட்டும், புதியன புகுத்தப்பட்டும் வெளிவருகிறது.]

உயரிய பதிப்பு — விலை ரூ. 2—0—0

விபரங்கட்கு:

அருணோதயம்

சென்னை-14.

நன்றி

பொங்கல் புது நாளன்று வாழ்த்துக்கள் அனுப்பி என்னை மகிழ்வித்த நண்பர்களுக்கு என் நன்றி

வி. சிவப்பிரகாசம்
'நம் நாடு'

அடுத்த இதழில்...

"சிரிப்புத்தான் வருகுதைய்யா"

முத்திய முறையிலே...

ஆந்திரத்தில் தேர்தல்

தி. மு. கழகத்தினருக்கு வேண்டுகோள்

ஆந்திர மாநிலத்தில் தேர்தல் நடைபெற இருக்கிறது.

மொழிவழி அரசுக் கொள்கைப்படி தமிழருக்கு உரியதான பகுதிகள், டில்லி சர்க்காரின் போக்கினால் ஆந்திர மாநிலத்தில் இதுபோது இணைத்துவைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த அநீதியைக் கண்டித்தும், தமிழரின் உரிமையை வலியுறுத்தியும் நமது கழகம் கருத்துரை வெளியிட்டதுடன் நில்லாமல், இயன்ற அளவு கிளர்ச்சியும் நடாத்திற்று.

தி. மு. கழகம், ஆந்திரர்—கேரளர்—கன்னடர் எனும் மும்மொழியினரையும் தமிழருடன் ஒன்றுபட வேண்டிய திராவிட இனத்தவர் என்ற கருத்துடனும், மொழிவழி தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம் அமைந்து, பிறகு இனவழி அந்நான்கும் வடவர் ஆதிக்கத்தினின்றும் விலகி ஓர் கூட்டாட்சி அமைத்தல் வேண்டும்—அதுவே திராவிடநாடு எனும் இலட்சியம் —என்ற தீர்மானத்துடனும் பணியாற்றி வருகிறது.

எனவே, ஆந்திரத் தோழர்களிடம் பகை உணர்ச்சி அறவே கூடாது என்று விளக்கமளித்து, பூசல் எழாத வகையில் பிரச்சனையைக் கவனிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்திருக்கிறது.

தமிழரின் நியாயமான உரிமையைப் பறித்துக் கொள்கின்றனர்—என்று, ஆந்திரரிடம் ஆத்திரப்படுவதில் அர்த்தமில்லை.

ஓர் அக்கிரம ஏற்பாட்டை மத்திய சர்க்கார் செய்திருப்பதே இந்த 'அமளி'க்குக் காரணம் என்பதை எடுத்துக் காட்டி வருகிறது.

மொழிவழி அரசுத் திட்டத்தை ஆதரிப்போரில், திராவிட நாடு இலட்சியத்திலே நம்பிக்கையற்றவர்கள்—நையாண்டி செய்பவர்கள்—'வடவர் ஆதிக்கம், மத்திய சர்க்கார் பிடி என்பனவெல்லாம் பொருளற்றவை,' என்று கூறிடும் போக்கினரும் உள்ளனர்.

மொழிவழி அரசுத் திட்டத்திலே நமக்குள்ள பற்று காரணமாக, அந்தத் திட்டத்தை வலியுறுத்துவோர் அனைவருடனும் நாம் ஒத்துழைக்கிறோம்.

இப்போது நடைபெறும் தேர்தலில், தமிழர்கள் உரிமை கொண்டாடத்தக்க வட்டத்திலே, தமிழர்களின் சார்பில் நடைபெறும் வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு, நான்கு தொகுதிகளில் அபேட்சகர்களை நிறுத்தியிருக்கிறது.

இந்தத் தேர்தலில், தமிழர்கள் இந்த 4 தொகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டால், தமிழரின் உரிமைப் பிரச்சனைக்குப் புதியதோர் வலிவு நிச்சயமாக ஏற்படும் என்று தி. மு. கழகம் உறுதியாக நம்புகிறது.

எனவே, இந்தத் தேர்தலில், இந்தத் தொகுதிகளில் உள்ள தி. மு. கழகத்தினர், மொழிவழி அரசுத் திட்டத்தின்படி, தமிழ் அபேட்சகர்களையே ஆதரித்து, வெற்றி தேடித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இது சம்பந்தமாக, நடத்தப்பட்ட ஆலோசனைக் கூட்டத்தில், வடாற்காடு மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, சித்தூர் தோழர்கள் கேசவன், முனுசாமி, பொதட்டூர் பேட்டைத் தோழர்கள் ராமசாமி, கணேசன், கோதண்டன் ஆகியோரின் கருத்தையும், பிறகு திருத்தணி தோழர் ரஷீத் அவர்களின் கருத்தையும் கேட்டறிந்தேன். அவர்களும், இந்தத் தேர்தலில் தமிழர்கள் "கட்சிப் பூசல்களை மறந்து ஒற்றுமைப்பட்டு, வடவெல்லைப் பாதுகாப்புக் கமிட்டியார் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிக்கு ஆதரவு திரட்டித் தந்து, தமிழர்களை வெற்றி பெறச் செய்து, அதன் மூலம், மொழி வழி அரசுக் கொள்கைக்கு வெற்றி கிடைத்திடச் செய்யவேண்டும்" என்று எடுத்துக் கூறினர். அந்தக் கருத்துப்படியே ஆலோசனைக் கூட்டத்தில் தமிழ் அபேட்சகர்களை ஆதரித்து, தி. மு. க. பணியாற்றுவது என்று முடிவு செய்யப்பட்டது.

எனவே, சித்தூர், பொதட்டூர்பேட்டை, திருத்தணி, ஏகாம்பரகுப்பம், வேப்பஞ்சேரி, நகரி ஆகிய வட்டங்களில் உள்ள தி. மு. கழகக் கிளைகளை, இந்தத் தேர்தலில், தமிழ் அபேட்சகர்களுக்கு ஆதரவு திரட்டித் தந்து வெற்றி பெறச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழரின் உரிமை! ★ மொழிவழி அரசு!

இவைதான் தி. மு. கழகத் தோழர்கள் வலியுறுத்த வேண்டியவை.

தி. மு. கழகத் தோழர்கள் எக்காரணம் கொண்டும் சொல்லாலோ, செயலாலோ ஆந்திரத் தோழர்களிடம் பகை உணர்ச்சிக் காட்டக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

நெருக்கடியான நேரத்தில், கொள்கைக்கு இழுக்கு ஏற்படாதபடியும், கழகத்தின் நற்பெயருக்குக் களங்கம் உண்டாகாதபடியும் தி. மு. கழகத் தோழர்கள் நடந்து கொண்டு, வெற்றிக்குப் பாடுபடுவார்கள் என்று நம்புகிறேன்.

தலைமை நிலையம்,
'அறிவகம்'
சென்னை-13

அன்பன்,
சி. என். அண்ணதுரை,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்.

● ஆசிரியரின் தந்தையார் மறைவு ●



கடந்த 4-2-55 வெள்ளிக்கிழமை இரவு 1-30 மணிக்கு நமது ஆசிரியர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். சீனிவாசன், (உரிமையாளர், மதராஸ் பிக்சர்ஸ்) ஏ. ஆர். கண்ணப்பன் ஆகியோரின் தந்தையார் சாத்தப்ப (செட்டியார்) இயற்கை எய்திய செய்தி கேட்டு மிகவும் வருந்துகிறோம். அன்னாருக்கு இந்த மூன்று ஆண்மக்களோடு, ஆறு பெண்மக்களும் உண்டு. அன்னார் தமது 68-வது வயதில் சிறு கூடற்பட்டி கிராமத்தில் இயற்கை எய்தினார். உற்றார் உறவினர் எல்லாம் சூழ 5-2-55 சனிக்கிழமை மாலை அன்னாரின் சடலம் எரியூட்டப்பட்டது.

கணவரை இழந்து வாடும் திருமதி விசாலாட்சி ஆச்சிக்கும், மக்கள் அனைவருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்
"தென்றல்" குழுவினர்

எங்கள் தந்தையார் மறைவுகேட்டு அனுதாபச் செய்தி அனுப்பிய அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த, நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஏ. ஆர். கண்ணப்பன்.
ஏ. எல். எஸ். சீனிவாசன்.
கண்ணதாசன்.

நாங்கள் கேட்கிறோம் நீங்கள் சொல்லுங்கள்

முதற் கேள்வியின் சரியான விடை

இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல் (621)
மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து (624)
அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும் (625)
இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர் (654)
உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு (788)
இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி (1030)

ஆக 'இடுக்கண்' என்னும் சொல் திருக்குறளில் ஆறு குறள்களில் ஏழு இடங்களில் வந்துள்ளது.

குறிப்பு:— சிலர் 'இடுக்கணழியாமை' என்ற அதிகாரத்தின் தலைப்பையும் சேர்த்து 'இடுக்கண்' எட்டு இடங்களில் வந்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளனர். ஆகவே அவர்களையும் சரியான விடை அனுப்பியவர்களாக ஏற்றுக் கொண்டோம். சரியான விடை அனுப்பியோரின் பெயர்கள் 7-ம் பக்கம் பார்க்க.

வெண்பாப் போட்டி

வெண்பாப் போட்டி 3

ஈற்றடி: "கொண்டுவந்து போட்டுக் கொளுத்து"

குறிப்பு: நேரிசை வெண்பாக்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

முடிவு தேதி 19-2-55

நீதிபதி 'சகி' தென்றல் :: சென்னை-6.

மு. சீனிவாசன் திருவல்லிக்கேணி

அழகு என்றால் என்ன? அது எப்படி இருக்கும்?

அழகு இப்படித்தான் இருக்கும், இதுதான் அசல் 'அழகு' என்று திட்டமிட்டுக் கூறமுடியாது. ஆனால் ஒன்று, அழகு என்பது சிக்கிரத்தில் அழிந்துவிடக் கூடிய ஒரு கொடுங் கோலாட்சி!

◉

கெ. பாண்டுரங்கன் மயிலம்

தென்றலாரே! வாழ்க்கை-காதல் இரண்டிற்குமுள்ள தொடர்பு எப்படிப்பட்டது!

வாழ்க்கை என்பது ஒரு மலர்: காதல் அம்மலரில் ஊறும் தேன்!

◉

. ஆர். முத்துசாமி சென்னை-16

என ராமர் குடித்தார் என்று இராமாயணம் நடத்தவேண்டும். இராமாயணம் உள்ள மாதிரி நடத்தினால் அரசாங்கம் என்ன செய்யும்?

அரசாங்கம் கிடக்கட்டும்: இராமாயணத்தை உள்ளது உள்ளபடியே நடத்தினால் சீதை வேஷம் போட எந்தப் பெண்ணும் சம்மதிக்கமாட்டாள். தவறி 'ஆலிவுட்' நடிகை வரவழைக்கப்பட்டால், மானமுள்ள யாரும் கொட்டகைக்குள் இருக்கமுடியாது! அவ்வளவு பயங்கரமான 'சோதனை'கள் தேவியாருக்கு!

◉

. அருணாசலம் போள்ளாச்சி

தென்றலாரே! 'இலவந்திகைப் பள்ளி' என்றால் என்ன? இலக்கியங்களில் காணப்படுகிறதே?

பண்டை தமிழ் மன்னர்கள் அரண்மனைகளில் இருப்பதோ டில்லாமல், இயற்கையழகும் குளிர்ச்சியும் பொருந்திய சோலையின் மத்தியில் அமைக்கப்பட்ட மாளிகைகளிலும் கோடை காலங்களில் வசித்தனர். அந்தமாளிகைக்கு 'இலவந்திகைப் பள்ளி' என்று பெயர்

◉

. நடாரசன் திண்டிவனம்

தென்றலாரே! சங்கப்புலவர்களும் அவர்களுள் பெண்பாற் புலவர்களும் எத்தனை பேர்?

சங்கப்புலவர்கள் சுமார் ஐநூறு பேர் இருந்திருக்கின்றனர்: அவர்களுள் பெண்பாற் புலவர்கள் முப்பத்து அறுவர் என்று தெரிகிறது:

◉

.த்தாசன் எழுகிணறு

தமிழில் தோன்றிய முதல் ...டுங் கதைப் பாடல் நூல் எது? எப்பொழுது தோன்றியது?

சிலப்பதிகாரம். சங்ககாலத்திற்குப் பிறகு தோன்றிய நூல்களில் அதுவே சிறப்புடைய காப்பியம்.

◉

சிவாராமன் திருச்சி

தென்றலாரே! கரிகாலனுக்குப் ...கு புகார் நகரில் இருந்து அரசாண்ட கிள்ளிவளவனும்—மணிமேகலையிற் கூறப்படும் கிள்ளியும் ...வர்தானா? இவனுக்கு வேறு பெயர்களுண்டா? இவன் சிறப்பென்ன?

ஆம்! இருவரும் ஒருவரே! இவனுக்கு நெடுமுடிக்கிள்ளி-வடிவேற்கிள்ளி—மாவண்கிள்ளி என்ற பெயர்கள் உண்டு. இவன் நாக நாட்டரசன் வளைவணன் மகளாகிய பீலிவளை என்பாளை மணந்து பெற்ற மகன்தான் உதயகுமாரன் என்பதும் மணிமேகலையால் தெளிவாகிறது:

◉

க. ப. மணி கோயம்புத்தூர்

தென்றலாரே, சாமியார் சாபமிட்டு 37 வீடுகள் சாம்பலாயின என்று பொய்த்தந்தியில் பார்த்தேன்; விளக்கம் தேவை?

இது தந்திக்கே உரித்தான 'டெக்னிக்'குகளில் ஒன்றாக இருக்கலாம்: இல்லாவிடில் அந்த சாமியார் கையாட்களை விட்டு முன் கூட்டியே விடுகளை கொளுத்தச் செய்திருப்பார்!

◉

தமிழ்ப்பித்தன் திருநெல்வேலி

தமிழிசைபற்றி ஒரு சிறு குறிப்பு தருக!

தமிழுக்குரிய ஏழிசைகளின் பெயர் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன. இவ்விசைகளின் ஓசைக் குவமை, வண்டு, கிளி, குதிரை, யானை, குயில், தேனு, ஆடு. இவ்விசைகளின் சுவைக்குவமை தேன், தயிர், நெய், எலம், வாழைக்கனி, மாதுளங்கனி.

◉

சேல்வராசு மேலப்பட்டி

தென்றலாரே! சீதையின் கற்பில் சுப்பிரமணியத்திற்கு ஏற்பட்டிருக்கும் அக்கரைபற்றி தங்கள் கருத்தென்ன?

இராமனுக்கோ மாபெரும் அவமானம்! சீதைக்கோ மானக்கேடு! கம்பன் புலமைக்கோ களங்கம்! மாற்றான் மனைவியின் கற்பில் இவருக்கு அக்கரையேற்படுவது ஆபத்து!

★

கோட்போட்டவர்: *என் சார்! என்ன சார் இந்தப் பக்கத்திலே சாக்கடை நாத்தமா நாறுது?*

வழுக்கைத்தலையர். *இங்கே தான் சார் 'தினத்தந்தி' ஆபீஸ் இருக்குது!*

> *பொதுவாழ்வில் பணியாற்றி, இலக்கியத்துப்*
> *பொன்வீட்டில் இளைப்பாறப் புகுந்தகாலை*
> *மதுக்கோப்பை கரத்திலேந்திக் குடியன்காணும்*
> *மாறாத கனவுலகம் காட்சியாகும்!*
> *சதுராடும் மங்கையரின் பாதத்தோடு*
> *சரியாகச் சேர்ந்தாடும் சிலம்பின் ஓசை*
> *கதகதப்பை வாலிபரின் உளத்தி லேற்றிக்*
> *கலக்குதல்போல் இலக்கியமும் கலக்கும் நெஞ்சை!*
>
> —கண்ணதாசன்

சீவக சிந்தாமணி சொற்பொழிவு

சமணர்கள் தமிழுக்கு செய்த தொண்டுகள் பல. அவற்றுள் சீவகசிந்தாமணி ஒன்று. தமிழிலக்கியங்களில் ஒன்றான இது, ஐம் பெருங்காப்பியத்தைச் சேர்ந்தது. இந்நூலின் சொல்லழகு புலவர் பலரால் பாராட்டப்பட்டது. இந் நூலின் காலம் சுமார் கி.பி. 10-ம் நூற்றாண்டெனக் கருதப்படுகிறது.

இந்த தலைசிறந்த காப்பியத்தின் சிறப்புபற்றி தமிழறிஞர் பலரின் கருத்து தொகுத்துத் தரப்பட்டுள்ளது இந்நூலில். கட்டுரை வழங்கிய அறிஞர் தம் கருத்துக்களில் முரண்பாடு குறைவே! முடிந்தவரை நடுநிலையோடு ஆராய்ந்துள்ளனர். பண்டைத் தமிழிலக்கியங்களின் ஆராய்ச்சிக்கானபயிற்சிக்கு இந் நினைவு மலர் துணை நிற்கும். இந் நினைவு மலரின் பதிப்பாசிரியரும்-சிந்தாமணிச் சொற்பொழிவாளருமான வித்வான் மே. வீ. வேணு கோபாலனரின் பணி சீரியது. மொழிவளர்ச்சிக்கு தேவையானது.

வெளியிட்டோர்:

சைனத்தமிழ் இலக்கியமன்றத்தார் காஞ்சிபுரம்

விலை ரூபாய் இரண்டு

◉

கோடை நாற்பது

பண்டைத் தமிழ்ப் பேரிலக்கியங்களின் கருத்துக்கள் படித்த இனத்தவரால் மட்டுமே புரிந்து கொள்ள முடிகிறது. பாமரர்களுக்கு அவைகள் எட்டாத உயரத்திலேயே இருந்து வருகின்றன. இதனால் சாதாரண மக்கள் இலக்கியங்களின் பொருள் உணர முடிவதில்லை. குறிப்பாக ஒரு இலக்கியத்திற்கு வேறொருவர் பொருளோ அல்லது விளக்கமோ எழுதுகிறார் என்றால் அது மூலத்தைவிட கடினமாகவும், எளிதில் பொருள் உணரமுடியாததாகவுமே அமைகின்றது. எல்லோரும் இலக்கிய நயம் உணர வேண்டுமானால், இலக்கியங்கள் கோபுர உச்சியிலிருந்து இறங்கி வரவேண்டும் என்பது அறிஞர் கருத்து. பண்டை சங்கஇலக்கியங்களும்-அவற்றின் கருத்துக்களும், சிறு சிறு தொகுப்புகளாக-எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டு வெளிவர வேண்டும். இந்த முறையில் 'கோடை நாற்பது' ஒரு நல்ல முயற்சி.

'கோடைமலை' சங்க நூல்களில் இடம் பெற்றுள்ளது. அங்கு வாழ்ந்த 'கோடைப் பொரு நன் கடிய நெடு வேட்டுவன்.' அவன் கொடை, வீரம் முதலியன பற்றி புறத்தில் ஒரு பாடல் உண்டு. எழில் நிறைந்த அந்த மலையையும் அது தன்னகத்தே கொண்டிருந்த பலசிற்றூர்களின் இயற்கைச் சிறப்புகளையும் இந்நூலாசிரியர் வெண்பா யாப்பில் அமைத்த பாடல்கள்மூலம் அழகான எளிய நடையில் கூறியுள்ளார். உவமைகள் நன்கு கையாளப்பட்டிருக்கின்றன. ஆசிரியர்கதிசுந்தரம் தியாகராசர்கல்லூரி மதுரை.

கிடைக்குமிடம்:

பாரி நிலையம்

பிராட்வே, சென்னை-1.

விலை அணா எட்டு

◉

தென்னாட்டுச் சிங்கம்

மேற்கை முதல்முதல் எதிர்த்தது வடக்கல்ல, தெற்குதான்! வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து முதலில் உரிமைக்குரல் எழுப்பிய தென்னாட்டுத் தீரன் கட்டபொம்மன்.

முகலாய ஆட்சி காலத்தில் வியாபாரப்போர்வையில் புகுந்த வெள்ளையன் வேரூன்றியபொழுது, நவாபுகள் அடிபணிந்தனர். பிரித்தாளும் சூழ்ச்சியால் பீஷ்வாக்கள் பிரிந்து நின்றனர். தஞ்சை அடிபணிந்தது. ஆர்க்காடு ஆடிற்று. ஆனால் வெள்ளையரை எதிர்த்து முதல் முழக்கம் எழுப்பினான் வீரன் கட்டபொம்மன். வரலாற்றில் இடம் பெற்றான். களபலியானான். தாயகத்தை இனத்தால் - மொழியால்-கலாச்சாரங்களால் வேறுபட்ட ஒரு இனத்தவர் - வெளிநாட்டார் அடிமைக் காடாக்குவதை விரும்பாத - அனுமதியாத - மறத் தமிழன் என்றால் இவன் ஒருவன் தான்! காரணம் இவன் எதிர்த்தது, வேற்று இனத்தவர் ஆட்சியை- ஆதிக்கத்தை, என்பது குறிப்பிடத் தக்கது. அந்த விடுதலை விரும்பியின் வாழ்க்கை நாடக உருவிலே தமிழகத்திற்கு தரப்படுகிறது. இதன் ஆசிரியர் நண்பர் **சிலம்பின் செல்வன்** *அவர்கள். 'தென்றலில்' இந்நாடகம் தொடர்ந்து வரும்பொழுதே தமிழகம் வரவேற்றது. பாராட்டியது. இப்பொழுது நூல் வடிவிலே உங்கள்முன்வைக்கிறார்கள்* **கோவை இளங்கோ பதிப்பகத்தார்** *படியுங்கள்!*

விலை ரூ. 1-8-0

★

வெண்பாப் போட்டி

2. என்றும் இளமை இவர்க்கு !

◉முன்னம் பலர்மடிய முத்தமிட் டின்மகனைப்
பின்னும் அனுப்புவித்தாள் போர்முனைக்கே !-மின்னல்
சென்றார் மடிந்திட்டார் என்றாலும் தம்புகழால் [போல்
என்றும் இளமை இவர்க்கு.

— அன்புரையன், அம்மையப்பன்.

★

குலத்துக் கொருநீதி கொண்டமனு நாண
உலகுக் கொருநீதி யோதி--புலவரே(று)
என்றுமுற இன்குறளை யீந்துபுகழ் கொண்டனரால்
என்றும் இளமை இவர்க்கு.

— க. வீ. குருசாமி, சென்னை-23.

★

தெள்ளுதமிழ்ப் பாவில் திசையெலாம் போற்றிடவே
உள்ளிக் குறளை உவந்தளித்தான்--வள்ளுவனே
நின்று இலங்குகின்ற நீளிம யம்போல
என்றும் இளமை இவர்க்கு.

— கு. இரமாதேவி, சென்னை-1.

★

கல்நின்ற காத்தான் கவிதையால் வாழ்இளங்கோ
நல்கு கொடைவள்ளல் நல்லெழுவர்--தொல்புவியில்
இன்னும் அறியார் எவரெவரோ வாழ்கின்றார்
என்றும் இளமை இவர்க்கு.

— வித்துவான் கரு. சுப்பையா, கல்லூரணி.

★

அஞ்சாத நற்சொல்லில், ஆற்றலுடை தோற்றத்தில்
எஞ்சாத பேரறிவில் எஞ்ஞான்றும்--நெஞ்சுரத்தில்
நின்றபுகழ் ஈ.வே.ரா. நேர்முதுமை யோ ? இல்லை
என்றும் இளமை இவர்க்கு.

— வித்துவான் ச. சுந்தரேசன், கோனூர்.

★

பண்டாரச் சன்னதிகள் பாராளு மன்றமும்
கொண்டாடுங் காலங் குறுகிற்றே--தொண்டாற்றி
வென்றதமிழ் நாட்டு விளக்கொப்பர் அண்ணாதான்
என்றும் இளமை இவர்க்கு.

— தமிழ்ச்செல்வம், குன்னூர்.

★

மொண்டுண்ண வண்டினம் முத்தமிழ்ப் பாவளித்துக்
கண்டுவக்கும் சுப்புக் கவிஞர் !--தொண்டுண்டு
குன்றா வளம்வாழ் குளிர்தமி ழுக்கெனில்
என்றும் இளமை இவர்க்கு.

— அ. செழியன், காட்டுப்புத்தூர்.

★

நின்றார் நெறிமுறையில், நீக்குவார் புன்மையினை,
குன்றார் குணச்சிறப்பில் கூசுவார்--கன்றலினை ;
ஒன்றுவார் ஓங்குபுகழ், ஓதுவார் ஒப்புரவே
என்றும் இளமை இவர்க்கு.

— இரத்தின. மனோகரன், கோலார் தங்கவயல்.

★

உள்ளத்தாற் பொய்யர் தொழுகின் உலகத்தார்
உள்ளத் துளெல்லா முளனெனவே--வள்ளுவனார்
அன்றே எடுத்துரைத்தார் அன்னவர்தான் சாவற்றார்
என்றும் இளமை இவர்க்கு.

— புத்தனேரி, ரா. வெங்கடாசலம், மதுரை.

★

சிந்தைக் களியும் செவிக்குநற் பண்ணையும்
சந்ததமும் ஈயும் தலைத்தமிழே !--பந்தமுள்
நன்கவிகள் நின்னுருவில் நல்கிடுவார் விண்மீன்போல்
என்றும் இளமை இவர்க்கு.

— வே. அர. சைலவாசன், வேலூர்.

★

நாட்டுமொழிக் காக நடராசன் தாளமுத்து
நாட்டிவிட்டார் தங்களுயிர் நானிலத்தே--கேட்டிடுவீர் !
பொன்றாத ஆர்வத்தால் செத்தார் ; புகழுலகில்
என்றும் இளமை இவர்க்கு.

— மலையமான், விழுப்புரம்.

★

அள்ளும் வயதோஈ ராயிரங்கள் ; ஆனாலும்
கொள்ளக் குறைவுபடாக் கூர்மொழியால்--வள்ளுவனார்
இன்றும் உறைகின்றார் ! எங்கள் தமிழ்க்கேபோல்
என்றும் இளமை இவர்க்கு !

— ரா. சுந்தரராஜ், தோப்பூர்.

★

எண்ணமுயர் சாக்ரட்டீஸ் ஏசுலிங்கன் காந்தியென
மண்ணில் மறைந்தமதி வாணர்கள்--எண்ணற்றார்
நன்றியுணர் வில்லார்தம் நஞ்சதனால் மாண்டாலும்
என்றும் இளமை இவர்க்கு.

— தமிழ்வேள், பாப்பாரபட்டி.

★

கட்டியடித் தாலுங் கடமை விடார்கோடி
இட்டுக் கொடுத்தாலும் ஏற்பதிலார்--வெட்டியுயிர்
கொன்று புதைத்தாலும் கொள்கை தவறாதார்
என்றும் இளமை இவர்க்கு !

— சீனி, பாப்பாரபட்டி.

★

தண்டூன்றிச் செல்லுகிற தள்ளாத காலத்தும்
தொண்டூன்றிச் செல்லுகிறார் துன்பங்கள்--கண்டுமனம்
என்றும் பணியாத எங்கள் தனிப்பெரியார்
என்றும் இளமை இவர்க்கு.

— சு. பாபு, சென்னை-4.

★

காரிருளை நீக்குகின்றான் காசினியிற் சூரியனே
பேரிருளை நீக்குகின்றார் பேரறிஞர்--ஆரிருளை
அன்றுமுத லின்றுவரை யன்னவர்தாம் நீக்குதலால்
என்றும் இளமை இவர்க்கு.

— ஆசிரியர். சவ்வாது, கயற்கண்ணிபுரம்.

★

குறளீந்த வள்ளுவன் குண்டலத்தின் கோமான்
கறையிலா நாலடி கண்டோர்--உறைபுகழ்
கன்னல் தமிழ்சிலம்பின் காவலர் ; நம்மனத்தில்
என்றும் இளமை இவர்க்கு.

— நா. சண்முகவேலு, திருச்சுழி.

★

போற்றுப் புகழுடைத்தாய்ப் பொன்னுைத்த நற்கலையின்
ஊற்றாய் எழில்சுரக்கும் ஓவியமாய்த்--தோற்றமுறு
கன்னித் தமிழன்னை காலமெல்லாம் நின்றிட்டார்
என்றும் இளமை இவர்க்கு.

— மேலை. இந்திரா, கல்லுப்பட்டி.

★

வெண்தாடி வேந்தர் விளங்குவைக்கம் வீரருயர்
தண்டூன்றித் தானடக்கும் தன்மையால்--ஒண்டமிழா !
ஒன்றியது மூப்பெனநீ ஓதினும் காணுணர்வு
என்றும் இளமை இவர்க்கு.

— T. N. N. கவிக்குஞ்சரப் பாவலர், வாளாடி.

★

◉பரிசுபெற்ற வெண்பா. பரிசு, ஓராண்டு 'தென்றல்' சந்தா.

தென்றல் திரை

பிப்ரவரி 15 முதல் எங்கும் கிடைக்கும்!
கண்ணதாசன் எழுதும்
" எங்கள் தொழில் கேளாய்!
இளங்கொடியே
சொல்லுகிறேன் "
நீங்கள் சந்திக்காத புத்தம்புதிய பகுதிகள்
விலை அணா நான்கு

Edited and Published by Kannadasan, 13, Nallanna Mudali Lane, Madras-14. Printed by R. M. Kanagasabapathy at Elangovan Printers, 23, Muthu Mudali St., Madras-14.